*Paradise Bird's Fourth Series, No. 2.*

குடும்ப மதுவிலக்கு சாஸ்திரம்

# Domestic Temperance Science

ILLUSTRATED

FOR

## Schools and Homes

BY

Y. G. BONNELL, P. B.

*Author of "Paradise Bird Series"*

"Nisi Dominus frustra."

S A

Y. G. BONNELL, P.B.

MADRAS:

Printed by Thompson & Co., at the "Minerva" Press,

33, Popham's Broadway

1916

*...yright Registered.*

...] [விலை : நாலு அணா.

R4,13
Λ116
79447

*Paradise Bird's Fourth Series, No. 2.*

# குடும்ப மதுவிலக்கு சாஸ்திரம்

# Domestic Temperance Science

ILLUSTRATED

FOR

**Schools and Homes**

BY

**Y. G. BONNELL,** P. B.

*Author of "Paradise Bird Series"*

MADRAS :
Printed by Thompson & Co., at the "Minerva" Press,
33, Popham's Broadway

1916

*Copyright Registered.*

**Price: Four Annas.]** [விலை : நாலு அணா.

# Domestic Temperance Science

TO

## Miss Martha S. Taylor

FORMERLY OF

## The American Madura Mission

AND NOW IN

## The United States of America

DEAR MADAM,

I have *dedicated* this my brochure the *Second* of the *Paradise Bird's Fourth Series* to you for the following reasons :—

1. It is you who tried hard to teach me *Temperance* in its widest sense in my younger days. I remember well how keenly you watched me and my ways giving suggestions regarding my food, dress, habits, etc. The valuable lessons you gave me both by precept and by example, unpalatable as they were in those days, have exercised a wholesome influence on me and enabled me to be the author of this book. I cannot therefore dedicate it to anybody more appropriate.

2. It is you who first taught me Tamil Grammar, Algebra, and Geometry, making me a class by myself. You carried on your labour of love in the Boys' and Girls' Boarding Schools in *Mandapasalai*, my birth-place, uninterruptedly for over fourteen years, from January 1868 to March 1882. Your dogs *Dip* and *Chip*, your pigeons (I am sorry I have forgotten the names of all but one உறைபனி and I cannot brush up my memory as my diaries of those days are lost unfortunately) and your trees சின்ன அலங்காரம், பெரிய அலங்காரம், குதிரைவால்செடி etc., were our objects of observation during those fourteen years of companionship and the many useful lessons you taught me through them have not been in vain. Your saintly father, Rev. H. S. Taylor, whom we used to call '*Father Taylor*', after whom my brothers Rev. Y. S. Taylor and Rev. Y. J. Taylor are named and who laid down his life for us in Kodaikanal on the 3rd February 1871, gave as his last message to us "Grieve not the **Holy Spirit of God**, in **Whom ye** were sealed unto the day of redemption" (Ephesians $4^{30}$). He and your venerable mother, Mrs. M.S. Taylor, whom we used to call '*Mother Taylor*' and who returned to the United States in 1875, were more than parents to me and to my sisters and brothers. The memory of the rocking chairs and spring cots I enjoyed to my heart's content is still an enjoyment during my weary hours. The love you had for us made you consider us your kith and kin and visit us at all hours, when any help was required, to play the part of the good Samaritan. And we reciprocated your love to the same measure. When you left the shores of India you were penniless; for, you had emptied yourself for us Indians. In short, the influence you exercised over me in those days was immeasurable and my dedicating this book to you is only a feeble expression of my unbounded gratitude to you.

3. Your colleagues, I mean the Missionaries of the American Madura Mission, were Total Abstainers like yourself and their influence over me was equally beneficial. I have been waiting for an opportunity to commend their noble example to my neighbours and to give expression to my feelings of gratitude to them. I, therefore, embrace this opportunity to realize my wish. In dedicating this book to you I dedicate it to them as well, to their noble successors who walk in their footsteps and to the good people in America who send out from time to time noble bands of Missionaries to my land to preach the Gospel of **Christ Jesus** by their words and deeds. The only other way left to me to show my genuine gratitude to you is to reflect you to my neighbours. May **God** our **Father** give us all grace to reflect **Sweet Jesus** for our neighbours to see.

PARADISE LODGE,
ROYAPURAM, MADRAS,
30*th September*, 1916.

I am,
Dear Madam,
Most gratefully yours,
Y. G. BONNELL, P.B.

---

## PREFACE.

This book *Domestic Temperance Science* (குடும்ப மதுவிலக்கு சாஸ்திரம்) is the *Second* of the *Paradise Bird's Fourth Series* intended for *Schools* and *Homes*. The present policy of the Educational Department to impart *Temperance Knowledge* to the pupils in schools to eschew *Strong Drink* is an excellent one and this book is written to meet the requirement. It may be advantageously used in all Tamil Schools not only as a *Temperance Text Book* but also as a *Non-detail Reader*. No home can afford to be without a copy ; for, the young hearts are the suitable grounds to lay the foundation to build up character which will withstand strong temptations of *Demon Drink*. To rid our land of this *Monster* the only course left to us is to work through and by the *Children of to-day* who will be the men and women of the future. It is, therefore, hoped that this book will be patronized by Managers, Inspectors and Inspectresses of Schools and others who have the

welfare of our country at heart and that it will be a mighty weapon in the hands of the members of the Temperance Associations.

I have not touched upon religion in this book and in its predecessor *Domestic Medical Science* (குடும்ப வைத்திய சாஸ்திரம்) owing to the request of Europeans and Indians who wish to observe *Religious Neutrality* in schools under their supervision. It does not mean that I am also for Religious Neutrality and that I am greedy of gain to betray my **Saviour** for a few pieces of silver as Judas Iscariot of old did. I am convinced that **Jesus Christ** who freed the people of the Pacific Islands from cannibalism is the **One** who is able to free India, my motherland, from Demon Drink and I recommend **Him** to the veteran drunkards for whom this book is not written, as their only **Saviour**.

I am indebted to many a friend and many a book for the valuable help received. As it is unnecessary to mention their names here, I content myself by thanking them collectively. Special mention, however, has to be made of a book and of a person. *The "Truth about Intoxicating Drinks or The Scientific Social and Religious Aspects of Total Abstinence" A Prize Essay by E. R. Barrette*, B.A., *Liverpool*, is an excellent book on Temperance. Miss J. H. Ross, M.A., B.Sc., of Northwick of Royapuram, kindly lent it to me and my book owes a good deal to it. *Samuel Sargunar Nadar, Esq.*, B.A., Retired District Registrar, had a part to play though indirectly.

I thank my **Heavenly Father** who has enabled me to write Four Series of books during the last 33 years and invoke **Him** to pronounce **His** benediction upon this book and to commission it to proclaim deliverance from the demon Drink.

My death is always before me. I never dreamt that I would survive my *Jubilee* and write the *Paradise Bird's Fourth Series.* I am spared by **God's** grace to wield my pen. But I am called upon to lose some of my sincere friends,

which is very grievous. On Saturday, the 24th April 1915, at about 3 P. M. *Evangelist G. J. Arthur*, B. A., B. L., whom I used to call "*Saint*" fell asleep. I have to record here another friend's departure.

*Rai Bahadur J. Solomon Gnaniyar Nadar*, B. A., B. L., Retired Sub-Judge, Coimbatore, entered into his rest on Sunday, the 30th July 1916, at 1-30 P. M. and he was laid in the Government Cemetery the following morning at about 9.

He was a Christian gentleman and wherever he went he earned golden opinions for his work and his character. He was friend of all and foe of none. His friendship with me was proverbial and he descended to my level to be my friend. As he was clothed with *humility* and *sincerity*, I loved him and honoured him very much. He was one who managed when he did alms to keep his left hand ignorant of what his right hand was doing.

His name has found a place in this book for two reasons. (1) It is he who taught me one of the most important Temperance lessons twenty-nine years ago. One day when he was in the Paradise Lodge I sent my servant boy to the toddy shop near by to change a rupee. He strongly denounced my action and warned me not to repeat it as it would be sending the boy into the jaws of the demon Drink and bringing his blood on my head. This valuable lesson, I have been transmitting to others ever since that time. (2) As the cost of the printing paper is increased by 175 per cent. on account of the terrible war which is still raging, I thought of publishing this book after *Peace* is restored and the cost of publishing books comes to the normal condition. But my friend's decease reminded me of the verse "*Whatsoever thy hand findeth to do, do it with thy might; for there is no work, nor device, nor knowledge, nor wisdom, in the grave, whither thou goest:*" (Ecclesiastes 9₁₀) and I sent it to the press forthwith.

PARADISE LODGE,
ROYAPURAM, MADRAS,
30*th September*, 1916.

Y. G. BONNELL, P.B.,
SUPERVISOR,
*U. F. C. M. Girls' Schools.*

# பொருளடக்கம்.
# (CONTENTS).

---

## I. ஆரம்பம் (Introduction).

1. குடும்ப மதுவிலக்கு சாஸ்திரம் (Domestic Temperance Science, P. 1) ; 2. பெற்றோருக்கு ஒரு வார்த்தை (A word to parents, P. 3) ; 3. பிள்ளைகளுக்கு ஒரு வார்த்தை (A word to children, P. 3) ; 4. உபாத்திமாருக்கு ஒரு வார்த்தை (A word to teachers, P. 4) ; 5. மற்றோருக்கு ஒரு வார்த்தை (A word to others, P. 5).

## II. பானங்கள் (Drinks).

6. பானங்கள் (Drinks, P. 6) ; 7. ஜலம் (Water, P. 7) ; 8. பால் (Milk, P. 8) ; 9. காப்பி (Coffee, P. 8) ; 10. தேயிலை (Tea, P. 9) ; 11. கொக்சோ (Cocoa, P. 10) ; 12. மற்றப் பானங்கள் (Other Drinks, P. 10).

## III. மதுபானங்கள் (Alcoholic Drinks).

13. மஸ்து (Alcohol. P. 12) ; 14. மதுபானங்கள் (Alcoholic Drinks, P. 14); 15. மதுபானங்கள் போஜன பதார்த்தங்கள் அல்ல (Alcoholic Drinks are not Articles of Food, P. 15) ; 16. மதுபானங்கள் உற்சாகந்தருவன அல்ல (Alcoholic Drinks are not Stimulants, P. 18).

## IV. சரீரத்தில் மஸ்து செய்யுங் கிரியை (The Effects of Alcohol in the Body).

17. சரீரத்தில் மஸ்து செய்யுங் கிரியை (The Effects of Alcohol in the Body, P. 20) ; 18. இரத்தாசயத்தில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Heart, P. 21) ; 19. மூளையில் மஸ்து செய்யுங் கிரியை The Effect of Alcohol in the Brain, P. 25) ; 20. ஈரலில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Liver, P. 27) ; 21. இரைப்பையில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Stomach P. 29) ; 22. குண்டிக்காய்களில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Kidneys P. 31).

## V. குடியால் விளையுந் தீங்குகள் (The Evils of Drink).

23. குடியால் விளையுந் தீங்குகள் (The Evils of Drink, P. 33) ; 24. வறுமை (Poverty, 34) ; 25. வியாதிகள் (Diseases, P. 37) ; 26. மரணம் (Death, P. 38) ; 27. பாவம் (Sin, P. 39) ; 28. சந்ததி அற்றுப்போதல் (Extinction of Posterity, P. 40).

## VI. குடிவிருத்தி (The Spread of Drink).

29. பூமியில் குடிவிருத்தி (The Spread of Drink in the World, P. 42); 30. இங்கிலாந்தில் குடிவிருத்தி (The Spread of Drink in England, P. 44); 31. இந்தியாவில் குடிவிருத்தி (The Spread of Drink in India P. 45); 32. சென்னை இராஜதானியில் குடிவிருத்தி (The Spread of Drink in the Madras Presidency, P. 46); 33. சென்னபட்டணத்தில் குடிவிருத்தி (The Spread of Drink in the City of Madras, P. 47).

## VII. முழுவிலக்கு (Total Abstinence).

34. மட்டு (Moderation, P. 50); 35. விலக்கு (Abstinence, P. 52); 36. குடிக்குப் பரிகாரம் (The Remedy for Drink, P. 53); 37 குடி என்னுங் கூளியை ஓட்ட ஒரே வகை (The only method to drive away Demon Drink, P. 55).

## VIII. இராஜரீக முன்மாதிரி (Kingly Example).

38. இராஜாவின் முன்மாதிரி (King's Example, P. 58); 39. குடும்பத் தலைவனின் முன்மாதிரி (Family Head's Example, P. 60). 40. தனியாளின் முன்மாதிரி (Individual's Example, P. 61).

## IX. வேறு துர்ப்பழக்கங்கள் (Other Evil Habits).

41. அபினும் கஞ்சாவும் (Opium and Ganja, P. 62); 42. புகையிலை (Tobacco, P. 63); 43. வெற்றிலை (Betel, P. 66).

## X. மதுவிலக்குப் பாட்டுகள் (Temperance Songs).

44. ஜலபானத்துக்கும் மதுபானத்துக்குஞ் சண்டை (Water Drink *versus* Alcoholic Drinks, P. 68); 45. மதுவிலக்குக் கும்மி (Temperance Kummi, P. 69); 46. குடிகாரனுடைய தாயின் புலம்பல் (The Lamentations of a Drunkard's mother, P. 72); 47. (The good decision of the Son of Drunkards, P. 74).

## XI. மதுவிலக்குக் கதைகள் (Temperance Anecdotes).

48. என்னைத் தொடாதே (Touch-me-not, P. 75); 49. நான் அம்மாளுக்கு என்ன செய்வேன்? நான் ஐயாவுக்கு என்ன செய்வேன்? (What shall I do for mother? What shall I do for father? P. 77); 50. ஜலமே விருந்துசாலைப் பானம் (Water is the only Table Drink, P. 79).

# Domestic Temperance Science.

# குடும்ப மதுவிலக்கு சாஸ்திரம்.

## I. அதிகாரம்.

### ஆரம்பம் (Introduction).

1. குடும்ப மதுவிலக்கு சாஸ்திரம் (Domestic Temperance Science). குடும்பங்களில் கள், சாராயம் முதலிய நாட்டு மதுபானங்களும், ஜின் (Gin), உவிஸ்கி (Whisky), ரம் (Rum), பிராந்தி (Brandy), முதலிய அன்னியதேச மதுபானங்களும் பிரவேசித்து, அநேக குடும்பங்களைச் சீர்குலையச் செய்திருக்கின்றன. மேலும், வருஷாவருஷம் மதுபானம் அருந்துவோர் தொகை ஒரு மட்டுக்குள் அடங்காமல் விருத்தியாகி வருவதைக் கவனித்தால் நமது நாடு மதுபானத்தால் எங்கே பாழாகிப்போமோ என்று நினைக்கத்தக்கதாய் இருக்கிறது. ஆதலால், ரயில் பாதையிலுள்ள மோசத்தைக் காட்ட சிவப்புக் கொடி பிடிப்பதுபோல் குடும்பங்களில் மதுபானத்தால் விளையக்கூடிய மோசங்களைக் காட்டிக் கூடுமானால் குடும்பங்களை அம்மோசங்களுக்குத் தப்புவிக்கும் நோக்கமாகவே 'குடும்ப மதுவிலக்கு சாஸ்திரம்' என்னும் இப்புஸ்தகத்தை எழுதியிருக்கிறோம். இதிலே மதுபானங்கள் எவையெனவும், மதுபானங்களினால்

விளையுங் கேடுதிகள் எவையயெனவும் அறிந்துகொள்வதல்லாமல், அக்கேடுதிகளுக்குத் தட்பும் வழிவகைகள் எவையயெனவும் கண்டு கொள்ளலாம். ஆனால் இது மதுபானத்தைப்பற்றிய வெறும் அறிவைப் புகட்டும் வெறும் சாஸ்திரம் என்று நினைக்கலாகாது. சிவப்புக்கொடியைப்பார்த்து ரயில்வண்டி ஓட்டுவோன் தன்னையும் ரயில்வண்டியில் உள்ளோரையும் மோசத்தினின்று விலக்கிக் காக்குமாப்போல் இப்புஸ்தகத்தைப் படிப்போர் தங்களையும், தங்கள் குடும்பத்தாரையும் மோசத்தினின்று காக்க விஷபானமாகிய மதுபானத்தைக் சுட்டோடே விலக்கிக் காக்கவேண்டும். இந்தப் பேராவலால்தான் இதற்கு 'மதுவிலக்கு சாஸ்திரம்' என்கிற பேர் சூட்டினோம். இதில் சொல்லப்படும் விதிகளும், விலக்குகளும குடும்பங்களிலுள்ளோர் அப்பியசிக்கக் கூடியவைகளும் அப்பியசிக்க வேண்டியவைகளுமாதலால்,நமது குடும்ப நிர்வாஹ சாஸ்திரத்தைப் போலவும், குடும்ப சுகாதார சாஸ்திரத்தைப் போலவும், குடும்ப வைத்திய சாஸ்திரத்தைபோலவும், இந்தக் குடும்ப மதுவிலக்கு சாஸ்திரமும் ஓர் சாதனசாஸ்திரம் ஆக இருக்கிறது. இது "குடும்ப சாஸ்திரம்" ஆகையால் குடும்பத்திலுள்ளோரே மதுவிலக்கு விஷயமாய்க் குடும்பத்திலுள்ளோருக்குச் செய்யவேண்டியவைகளை மாத்திரம் இதில் சொல்லியிருக்கிறோம். இராசாங்கத்தாராவது, நகர விசாரணைக் கர்த்தாக்களாவது செய்யவேண்டியவைகளை எடுத்துரைக்கவில்லை. மேலும், மதுபானத்தை நமது நாட்டிலும் நகரத்திலுமிருந்து துரத்த இவர்கள் படும் பிரயாசமெல்லாம் குடும்பத்தார் உடன்படின் கூடுமேயல்லாது, மற்றப்படி விழலுக்கு இறைத்த நீர்போலாகும். ஆதலால் மதுவிலக்கு சாஸ்திரம் குடும்பத்திற்கே உரியதெனச் சொல்லத் துணிந்தோம்.

2. பெற்றோருக்கு ஒருவார்த்தை (A word to Parents). பெற்றோரே, மதுபானத்தினால் விளையுங் கெடுதிகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உங்கள் கண்கள்முன் இருப்பதால் உங்கள் பிள்ளைகள் மதுபானப் பிரியராக நீங்கள் விரும்பீர்கள் என்பதை அறிவோம். ஆதலால் இப்புஸ்தகத்தைக் கருத்துடன் வாசித்து, அதை மதுபானத்தினால் விளையும் மோசத்தைக் காட்டும் சிவப்புத் துவசமாக அவர்களுக்குக் காட்ட உங்களுக்கு ஆலோசனை சொல்லுகிறோம். ஆனால், நீங்கள் மதுபானம் அருந்துவோரானால் உங்கள் போதனை உங்கள் பிள்ளைகளிடம் பலிக்காதென்பதை அறியக்கடவீர்கள். போதனையிலுஞ் சாதனையே மேல். நூலைப்போல சேலையாதலால் பெற்றோரைப்போலவே பிள்ளைகளுமிருப்பார்கள். முதலாவது உங்கள் பிள்ளைகள் நிமித்தமாகவும், இரண்டாவது உங்கள் அயலார் நிமித்தமாகவும், மூன்றாவது உங்கள் நிமித்தமாகவும் மதுவை நீங்கள் விலக்கவேண்டியது அத்தியந்த அவசியம். பழக்கங் கொடியதுதான். ஆயினும் நரமாமிச பட்சணிகள் முதலாய் தங்கள் தொட்டிற் பழக்கத்தைச் சுடுகாடுமட்டுங் கொண்டுபோகாமல் இடையில் விலக்கிவிட்டார்களென்றால், நீங்கள் இடையில் பழகிய குடியை இப்போதே விட்டுவிடுவது அசாத்தியமா?

3. பிள்ளைகளுக்கு ஒருவார்த்தை (A word to Children). அருமைப் பிள்ளைகளே, வாழையின் கீழ்க் கன்றுபோல் இன்று பெற்றோரின் கீழிருக்கிற நீங்கள் வளர்ந்து, நீங்களே இனி ஒரு நாள் குடும்பத்தை நடத்துபவர்கள் ஆவீர்கள். மதுபானத்தினால் மதிமயங்கி பலகோரணிகள் செய்வோரை நீங்கள் பார்த்துச் சிரித்திருப்பீர்களாயினும், மதுபானத்தி

ணுல் குடும்பங்களுக்கு நேரிடும் தீமைகளைக்குறித்துச் சிந்தித் திருக்கமாட்டீர்கள். ஆதலால், மதுபானத்திஞல் விளையுங் கெடுதிகளை உங்களுக்கு எடுத்துக்காட்டி, மோசத்துக்கு உங் களைத் தப்புவிக்கும் நோக்கமாய் இப்புஸ்தகத்தைச் சிவப் புக்கொடிபோல் உங்கள்முன் வைக்கிறேம். நீங்கள் அதைக் கவனமாய் வாசிப்பீர்களாஞல் மதுபானத்தின் விஷத் தன் மையை அறிந்துகொள்வீர்கள். ஆறு பெருக்கெடுத்து அதில் வெண்மையான ஒன்று மிதந்துகொண்டுவர, நீச்சுக்காரன் ஒருவன் அதில் பணமுடிப்பு இருக்குமென்றெண்ணி, நீந் திப்போய் அதைத் தூக்க, தொட்ட க்ஷணமே வெள்ளத்தி லகப்பட்டுச் சுருண்டு மிதந்துவந்த வெண்கரடி உயிர் தப்ப லாமென்று அவனைப் பிடித்துக்கொண்டது. அவன் அதை விட்டு விட்டாஞயினும் அது அவனை விடவில்லை. ஆகையால் அவன் ஜலத்தில் அமிழ்ந்து மாண்டான். அப்படியே மது பானத்தை அருந்துகிறவனும் இருக்கிறன். அவன் அதை விடப் பார்த்தாலும் அது அவனை விடுவது அரிது. ஆதலால் நீங்கள் பிராந்தியைச் செங்கரடி எனவும், சாராயத்தைக் கருங்கரடி எனவும், கள்ளை வெண்கரடி எனவும், மற்ற மது பானங்களைப் பலவருணக்கரடிகள் எனவும் பாவித்து அவை களை அணுகாதிருங்கள். அப்போது நீங்கள் மதுபானத்தி ஞல் விளையும் மோசத்துக்குத் தப்புவதன்றி குடி என்னுங் கூளியை ஒரே தலைமுறையில் குடும்பங்களிலிருந்து துரத்தி விடுவீர்கள்.

4. உபாத்திமாருக்கு ஒரு வார்த்தை (A word to Teachers). உபாத்திமாரே, நீங்கள் உன்னத ஸ்தானத்திலிருக் கிறீர்கள். உங்கள் மாணக்கருக்கு நீங்கள் செய்யக்கூடியதை

வேறு யாருஞ் செய்ய முடியாது. நீங்கள் ஆலோசனையாகச் சொல்லுகிறவைகளை முதலாய் அவர்கள் கட்டளைகளாகத் தங்கள் சிரமேற்கொண்டு நடக்கப் பார்ப்பார்கள். நீங்கள் அவர்கள் பார்வையில் சர்வாதிகாரிகள். சிறார் கற்குங் கல்வி சிலையிலெழுத்தாகையால் நீங்கள் உங்கள் இளம் மாணாக்க ருக்கு இப்போது கற்பிக்கும் நீதிசாஸ்திரங்கள் அவர்கள் பெரியோராகும்போதும் அவர்களை விட்டெடுபட்டுப் போகா. அவர்கள் மதுவிலக்கு சாஸ்திரம் கற்பதற்கு இதுவே ஏற்ற காலம். ஆதலால், உங்கள் போதனையினால் மாத்திர மல்ல, உங்கள் நல் முன்மாதிரியினாலும் மதுபானத்தை வெறுக்க உங்கள் மாணாக்கரைச் செய்விப்பீர்களானால் இந் தியாவுக்குப் பெரிய ஆசீர்வாதமாயிருப்பீர்கள்.

5. மற்றோருக்கு ஒரு வார்த்தை (A word to others). எஜமான்மார்களே, மதுபான விஷயமாய் நீங்கள் உங்கள் வேலைக்காரருக்குச் செய்யவேண்டிய கடமையுண்டென்று உணருவீர்களாக. போதனை சாதனைகளால் அவர்கள் மதுபா னத்தைத் தேடாதிருக்கப் பயிற்றுவிப்பீர்களானால் அவர்கள் தங்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பதன்றி உங்களுக்கும் ஆசீர் வாதமாயிருப்பார்கள். இந்தப் புஸ்தகம் உங்கள் கையில் மோசத்தைக் காட்டும் சிவப்புக் கொடிபோல் இருப்பதாக.

வேலைக்காரரே, கஷ்டப்பட்டுச் சம்பாதித்த காசைக் கள்ளுக் கடைகளில் எறிந்துவிடாதிருங்கள். உங்கள் மனைவி மக்கள் கஞ்சிக்கு முட்டுப்படாமலும், கந்தை கட்டி மானபங் கப்படாமலும் இருக்கவேண்டுமானால் மதுபானக் கடைகள் பக்கமாய் உங்கள் முகத்தைத் திருப்பாதிருங்கள். நீங்கள் வட்டிக்குக் கடன் கொடுப்போர் கையிலகப்பட்டு அவஸ்தைப்

படாதிருக்க வேண்டுமானால், உங்கள் சரீரம் மெலிவடைந்து, உங்கள் பலங்குன்றி, உங்கள் காலத்துக்குமுன் உயிர் துறக்காதிருக்க வேண்டுமானால் மதுபானம் சும்மா வந்தாலும் அதை ருசிபாராதிருங்கள். சென்னபட்டணத்துச் சாராயக் கடைகளின்முன் பகலில் சிவப்புக் கொடி பறப்பதையும், இரவில் சிவப்பு வெளிச்சம் ஜொலிப்பதையும் பார்த்திருப்பீர்கள். சிவப்பு மோசத்துக்கு அடையாளம் என்பதை அறியீர்களா? இந்தப் புஸ்தகத்தை வாசித்தாவது, வாசிக்கத் தெரியாதானால் வாசிக்கக்கேட்டாவது மதுபானத்தினால் விளையுங் கெடுதிகளைத் தீர்க்கமாய் அறிந்து, மதுபானங்களைக் கட்டோடொழித்துவிடுங்கள்.

---

## II. அதிகாரம்.

### பானங்கள் (Drinks).

6. பானங்கள் (Drinks). நமது சரீரத்தில் முக்கால் பங்கு நீர் என்று சொல்லவேண்டும்; ஆதலால், நமது போஜன பதார்த்தங்களில் முக்கால் பங்கு நீர்மயமான வஸ்துக்களாக இருக்கவேண்டும். மேலும், நமது சரீரத்திலுள்ள நீர் வியர்வை, சிறுநீர் முதலியனவாகக் கழிந்துகொண்டே இருக்கிறபடியால் நமக்கு அடிக்கடி தாகமெடுக்கிறது; ஆதலால் நாம் தாகத்தைத் தீர்க்கப் பலவகைப் பானங்களை உபயோகிக்கிறோம். பானங்களையெல்லாம் இயற்கைப் பானங்கள் (Natural Drinks), செயற்கைப் பானங்கள் (Artificial Drinks) என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இயற்கைப்

பானங்களில் ஜலமும், பாலுமே முக்கியமானவைகள் ; நமது நாட்டில் வெயில்காலத்தில் இளநீரும் சாதாரணமாய் உபயோகிக்கப்படுகிறது. செயற்கைப் பானங்களில் காப்பி, தேயிலை, கோக்கோ என்னும் சுடுபானங்களே முக்கியமானவைகள் ; ஆனால் தற்காலத்தில் சோடாநீரும், எலுமிச்சம்பழ ரசமும் சாதாரண பானங்களாகிவிட்டன ; மேலும் வெயில்காலத்தில் பலவகைச் சர்பத்துகளும் பானங்களாக உபயோகிக்கப்படுகின்றன. மதுபானங்கள் செயற்கைப் பானங்களில் சிறந்தனவாகப் பலரால் கொண்டாடப்பட்டபோதிலும் நாம் அவைகளைப் பானங்களாக மதிக்கிறதில்லை ; ஏனென்றால் அவைகள் தாகத்தைத் தீர்க்கிறதற்குப் பதிலாக தாகத்தை அதிகரிக்கச் செய்கிறவைகளாயிருக்கின்றன. ஆதலால் மதுபானங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் பேசமாட்டோம்.

7. ஜலம் (Water). சுத்தஜலமானது பிராணவாயு, ஜலவாயு என்னும் இரண்டு வாயுக்கள் சேர்ந்துண்டானது. இதுவே பானங்களிலெல்லாஞ் சிறந்தது. தாகத்தைத் தீர்ப்பதில் இதற்கு நிகரானவை இயற்கைப் பானங்களிலுங் கிடையா, செயற்கைப் பானங்களிலுங் கிடையா. ஜலத்தைப்போல் தேகமெங்கும் தசைகள்முதலிய நீருடைய பாகங்களில் சமமாய்ப் பரவி, அவைகளை மெதுவானவைகளும் அமுங்கக் கூடியவைகளுமாய் வைக்கத்தக்க வஸ்து வேறொன்றில்லை. ஜலபானமே நாம் உட்கொள்ளும் போஜன பதார்த்தங்களுடன் சேர்ந்து, அவைகளைக் கரைத்து, அவைகளை இலேசாய் ஜீரணிக்கச் செய்வதற்கு மிக ஏற்ற பானம். இரத்தம் சரீரமெங்கும் ஓடி அதைப் போஷிப்பதற்கும், சரீரத்திலுள்ள கழிவு பதார்த்தங்களை வெளிப்படுத்தி அதைச்

சுக ஸ்திதியில் வைப்பதற்கும் ஜலம் காரணமாயிருக்கிறது. ஜலக்குடியரே தீர்க்காயுளுடையோரானல் ஜலத்திலுஞ் சிறந்த பானம் வேறுண்டோ ?

8. பால் (Milk). பாலிலே நூறில் எண்பத்தேழு பங்கு ஜலம் ; மேலும் இது தாகத்தையுந் தீர்க்கத்தக்கது. ஆதலால் இது ஜலத்துக்கு அடுத்த நல்ல பானந்தான். ஆனல் இதில் சரீரவளர்ச்சிக்கு வேண்டிய எல்லாச் சத்துக்களும் அடங்கியிருப்பதாலும், சிறு குழந்தைகள் பிறந்து ஆறு மாதங்கள்வரை பால் ஒன்றையே பருகி வளர்வதாலும் பால் போஜன பதார்த்தமாக எண்ணப்படுகிறது. கேசீன், வெண்ணெய், சர்க்கரை, உப்பு, நீர் முதலியவை பாலிலுள்ள முக்கிய வஸ்துக்கள். பால் மாமிச போஜனமானதால் சரீரத்துக்குக் கிளர்ச்சியை உண்டுபண்ணத்தக்கது. ஆதலால் களைத்துச் சோர்ந்து போயிருக்கிறவர்கள் பாலைப் பருகினல் களை தீர்ந்து உற்சாகமடைவார்கள்.

9. காப்பி (Coffee). மனுஷர் இயற்கைப்பானங்களில் திருப்திகொள்ளாமல் நரம்புகளைச் செருக்கடையச்செய்து, மூளைக்குக் கிளர்ச்சி யுண்டுபண்ணும் பற்பல செயற்கைப் பானங்களை வெவ்வேறு காலங்களில் செய்துகொண்டார்கள். அவைகளில் முக்கியமானவை காப்பி, தேயிலை, கோக்கோ என்பவைகள். மதுபானங்களை அருந்தாதபடி தங்கள் மதத்தால் விலக்கப்பட்டிருக்கிற அரபியருக்கும், துருக்கியருக்கும் காப்பியானது உற்சாகந்தரும் பானமும் மதுபானத்தை நாடாதிருப்பதற்கு ஒரு மாற்றுமாயிருக்கிறது. காப்பிக் கொட்டையிலுள்ள ஆவிபோன்ற தைலம் (Volatile Oil) காப்பிக்கு மணமும் ருசியுந் தருகிறது. காவ்வீன் (Caffeine)

என்று சொல்லப்படும் வேறொரு வஸ்துவும் காப்பியிலுண்டு. இதைத் தீன் (Theine) என்றுஞ் சொல்லலாம். இந்த வஸ்து தான் நமது சரீரத்தில் அதிக வேலை செய்கிறது. இது தவிர வேறு பல வஸ்துக்களும் காப்பியிலுண்டு. காப்பி வெயில் காலத்தைவிடக் குளிர்காலத்துக்கு அதிகம் ஏற்றது. தேயிலை யைப் பார்க்கிலும் காப்பிதான் நமக்கு அதிக உற்சாகத்தைத் தரும். இது நமது தோலின் வேலையைக் குறைத்து இரத்தா சயத்தின் தொழிலை அதிகப்படுத்துகிறது. ஆதலால் காப்பி அதிக வேர்வையுடையவர்களுக்கு நல்லது. இரத்தாசயத் துடிப்பு உடையவர்களுக்கு இது உதவாது. ஆஸ்திக்காரர் களுக்கும், ஏழைகளுக்கும், சரீரவேலை செய்யுங் கூலிக்கார ருக்கும், மனோவேலை செய்யும் உபாத்திமார், மாணாக்கருக் கும் இது ஏற்ற பானம். மட்டாய்ச் சாப்பிட்டால் போஜனம் ஜீரணமாவதற்கு அது உதவி செய்யும். மட்டுக்குமிஞ்சித் தூள் போட்டுச் செய்த காப்பிப் பானம் மூளைக்கும் நரம்பு களுக்கும் தொந்தரவை உண்டுபண்ணித் தூக்கத்தைக் கெடுக்கும்.

10. தேயிலை (Tea). தேயிலை சீனாவில் உற்பத்தியாகி உலகத்தின் பலபக்கங்களில் பரவியிருக்கிறது. சீனாக்காரர் சர்க்கரை, பால்சேர்க்காமலே வெறுந் தேயிலைக் கஷாயத்தை வாஞ்சையாய்ப் பருகுவார்கள். தேயிலையிலுள்ள தீன் (Theine) தான் சரீரத்தில் அதிகக் கிரியை செய்கிறது. அது நரம்புகளைச் செருக்கடையச் செய்து, ஜனங்களை விழித்தி ருக்கச் செய்கிறது. இதிலுள்ள ஆவிபோன்ற தைலம் (Volatile Oil) பானத்துக்கு வாசனையும் ருசியுங் கொடுக்கிறது. தேயிலையில் வேறு பொருட்களும் உண்டு. சரீரத்தை வளர்க்

கும் நல்ல போஜனஞ் சாப்பிடும் ஆஸ்திக்காரர்களுக்கும், வேலையற்று வீட்டிலிருப்பவர்களுக்கும் தேயிலைப் பானம் நல்லது. ஆனால் நல்ல போஜனங் கிடையா ஏழைகளுக்கும், பலவீனர்களுக்கும், கொழுப்பு அதிகமின்றி மெலிந்துபோயிருக்கிறவர்களுக்கும், கடினவேலை செய்கிறவர்களுக்கும் ஏற்றதல்ல. இது வேர்வை உண்டாகும்படி செய்து, சரீர அனலைத் தணித்து, கொழுப்பை உருக்குமாதலால் இயல்பாய் அதிக வேர்வையுடையவர்கள் இதைச் சாப்பிடலாகாது.

11. கோக்கோ (Cocoa). கொக்கோவானது கொக்கோ மரத்தின் விதையிலிருந்து செய்யப்படுகிறது. மேற்கிந்திய தீவுகளிலும், மத்திய அமெரிக்காவிலு மிருந்த கொக்கோ மரம் வரவர வேறு இடங்களிலும் பயிராகிறது. கொக்கோவிலுள்ள தியோபிரோமைன் (Theobromine) என்னும் வஸ்து தன்மையில் காப்பியிலுள்ள காவ்வீனையும், தேயிலையிலுள்ள தீனையும் போலொத்தது. ஆனால் தியோபிரோமைன் அவ்விரண்டைப் பார்க்கிலும் அதிக நைற்றிஜென் உடையதாகையால் சரீரத்தை வளர்க்கத்தக்கது. கொக்கோவானது தேயிலையைப்பார்க்கிலும் 13-மடங்கும், காப்பியைப் பார்க்கிலும் 4½-மடங்கும் சரீரத்தைப் போஷிக்குஞ் சத்துள்ளதாகையால் அது பானமாயிருப்பதுமன்றி போஜனமாகவுமிருக்கிறது. மேலும் தேயிலையினாலும், காப்பியினாலும் சிலருடைய மூளைக்கும், நரம்புகளுக்கு முண்டாகும் கெடுதி கொக்கோவினால் உண்டாகிறதில்லை. ஆகையால் இது எல்லாருக்கும் ஏற்ற போஜனம்.

12. மற்றப் பானங்கள் (Other Drinks). மதுபானங்களின்மேல் மனுஷருக் கிருக்கும் வாஞ்சையைத் தணிக்கவும்,

பானங்களின்மேல் மனுஷருக்கு வாஞ்சையை உண்டுபண்ண வும் அநேக பல நிறப் பானங்கள் செய்யப்படுகின்றன. அவை கள் சுகதேகிகளாலும், பலசாலிகளாலும், வியாதியஸ்தர்க ளாலும், குளிர்ச்சிக்கென்றும், பலத்துக்கென்றும், சுகத்துக் கென்றும், வெறும்பானமாகவும், மருந்தாகவும் அபரிமித மாய் உபயோகிக்கப்படுகின்றன. கரியமலவாயு சேர்த்துச் சேய்யப்படும் பானங்கள் (Aerated Waters) பொங்குந் தன்மையுடையவைகளாதலால் சிரேஷ்டமாகக் கொண்டா டப்படுகின்றன. இவைகள் நிறத்திலும், ருசியிலும், தன் மையிலும் ஒன்றிற்கொன்று வேறுபட்டு வெவ்வேறு பெயர் கள் பெறுகின்றன. இவைகளில் லேமனேட் (Lemonade) என்று சொல்லப்படும் எலுமிச்சம்பழ ரசபானமும், சோடா நீரும் (Soda Water) மிகச் சாதாரணமானவை. கோலா (Kola), குவினைன் டானிக் (Quinine Tonic), ஜிஞ்ஜர் பீர் (Ginger Beer) சம்மர்சப் (Summer Cup) முதலிய இவ் வகுப்புப் பானங்கள் கணக்கற்றனவாய் சென்னபட்டணத் துக் கடைகளெங்கும் மலிந்துகிடக்கயில் சென்னபட் டணத்தில் மதுபானக்குடி அதிகரிப்பது ஆச்சரியமல்லவா?

ஐஸ் (Ice) என்று சொல்லப்படும் ஜலக்கட்டியும், ஜலக் கட்டியால் பாலேடுஞ் சர்க்கரையுஞ் சேர்த்துச் செய்யப் படும் ஐஸ்கிரீம் (Ice-Cream) என்று சொல்லப்படும் பான மும் வெயில்காலத்தில் உஷ்ணத்தைத் தணித்து, தாகத்தைப் போக்க வழங்கப்படுகின்றன.

எலுமிச்சம் சர்பத்து (Lime Syrup), நன்னாரி சர்பத்து (Sarsaparilla Syrup) முதலிய சர்பத்துகளை ஜலத்தில் விட்டு பானங்களாக விற்கிறார்கள். இவைகளும் கண்கவரும் பல

நிறமுடையன. இவைகளும் குளிர்ச்சிக்கென்றும், பலத்துக்கென்றும், சுகத்துக்கென்றும் உபயோகிக்கப்படுகின்றன.

---

## III. அதிகாரம்.

### மதுபானங்கள் (Alcoholic Drinks).

13. மஸ்து (Alcohol). அல்கோஹால் என்று அழைக்கப்படும் மஸ்து ஓர்வகை நிறமற்ற திராவகம்; இதற்கு உறைப்பும் எரிவுமுள்ள சுவையுண்டு; இதன் சீதோஷ்ணநிலே மிகக் கீழே கொண்டுபோகப்பட்டாலும் இது கூழ்போலாகுமே தவிர கட்டிப்போகிறதைக் காணேம்; இதற்கு ஈரத்தை உறிஞ்சுகொள்ளுந் தன்மையுண்டு. இது திராக்ஷப்பழம், பேரீச்சம்பழம் முதலிய பழங்களிலிருந்தும், அரிசி, கோதுமை, வாற்கோதுமை முதலிய தானியங்களிலிருந்தும், தென்னே, பனே, பேரீந்து, கரும்பு முதலியவைகளின் சாறுகளிலிருந்தும், கிழங்கு முதலியவைகளிலிருந்தும் எடுக்கப்படுகின்றன. சர்க்கரையானது ஜலத்தின் சேர்க்கைப் பொருட்களாகிய பிராணவாயு, ஜலவாயு என்னும் இரண்டுவாயுக்களும், இருந்தை அல்லது கரி என்னும் மூன்ருவது பொருளுஞ் சேர்ந்துண்டானது. திராட்சப்பழ ரசத்தை அல்லது பனங்கள்ளே பதமழிந்து சளித்துப்போக விடுவதிஞல் அதிலுள்ள சர்க்கரையானது அதிலுண்டான பிரை அல்லது உறை (Yeast) என்னும் புளிப்பேறி, பிராணவாயு, ஜலவாயு, இருந்தை என்னும் முப்பொருளாகப் பிரிக்கப்பட்டு, பிராண

வாயும் இருந்தையுஞ் சேர்ந்த கரியமலவாயு (Carbonic acid gas) ஆகவும், ஜலவாயும் பிராணவாயும் இருந்தையுஞ் சேர்ந்த மஸ்து (Alcohol) ஆகவும் மாறுகிறது. அரிசி, கோதுமை, வாற்கோதுமை முதலிய தானியங்களிலுள்ள சர்க்கரையின் அளவு இயற்கையில் மிகக் குறைவுள்ளதென்றாலும் தானியங்களின் மாப்பண்டம் முதலாவது சர்க்கரையாக மாற்றப்பட்டு, அதன்பின் பிரை ஏற்றப்படுவதினால் அதிக மஸ்து தானியங்களிலிருந்துங் கிடைக்கிறது, இவ்வண்ணமாகவே கிழங்கு முதலியவைகளிலிருந்தும் மஸ்து செய்யப்படுகின்றன. இப்படி உண்டாக்கப்படும் மஸ்து நீர் கலந்ததாகையால் அதைக் காய்ச்சி வடிப்பார்கள் (Distil). அப்போதுங்கூட அது சுத்த மஸ்துவாக இராது. ஆதலால் நீற்றாத சுண்ணம்பு (Quicklime) அல்லது சார்பனேற்று ஆவ் பொட்டாசியம் (Carbonate of potassium) முதலிய வஸ்துக்களை அதோடு சேர்த்து அதை மறுபடியும் காய்ச்சி வடிப்பார்கள். அப்போது அது நீரில்லா சுத்த மஸ்து (Anhydrous alcohol) ஆகும்.

மஸ்து மனுஷர் சாப்பிடும் போஜன பதார்த்தங்கள் அழுகி அல்லது பதமழிந்து போகும்பொழுது அவைகளிலுள்ள சர்க்கரை தனிப் பொருட்களாகப் பிரிக்கப்பட்டு, அத்தனிப்பொருட்களின் ஓர் பாகம் ஓர் அளவுப்படி மறுபடியுஞ் சேர்வதினால் உண்டாகிற திராவகமானாலும், இத்திராவகத்தை இயற்கையில் காண முடியாது. ஏனென்றால், எப்படி கரியமலவாயு என்னுங் கொடிய விஷவாயு தாபரவர்க்கங்களால் இழுக்கப்பட்டுத் தனிப்பொருட்களாகப் பிரிக்கப்பட்டு மனுஷருக்கும் மற்ற ஜீவஜெந்துக்களுக்கும் ஆகாரமாயிருக்கப் புதுச் சேர்க்கைகளில் சேருகின்றனவோ, அப்படியே

மஸ்து என்னும் கொடிய விஷதிராவகமும் பிரிக்கப்பட்டு, மறுபடியுஞ் சேருஞ் சேர்க்கையினால் சிருஷ்டிகளுக்குப் போஜனமாக மாற்றப்படுகின்றன. மனுஷனே மனுஷனுடைய போஜன பதார்த்தங்களை அழித்து, மனுஷனுக்குக் கேடாயிருக்கும் மஸ்து என்னும் திராவகத்தை உண்டாக்கியிருக்கிறான்.

14. மதுபானங்கள் (Alcoholic Drinks). மஸ்து சேர்ந்திருக்கும் பானங்களெல்லாம் மதுபானங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மதுபானங்களை பிரையேறிய மதுபானம் (Fermented Liquor) காய்ச்சிவடித்த மதுபானம் (Distilled Liquor) என இரு வகுப்புகளாகப் பிரிக்கலாம்.



*Fig.* 1. கள் இறக்குதல் (Drawing Toddy).

தென்னை, பனை, பேரீந்து முதலிய மரங்களிலிருந்து இறக்கும் சள், திராக்ஷை, பேரீந்து முதலியவைகளின் பழங்களிலிருந்தெடுக்கும் திராக்ஷரசம், வாற்கோதுமை முதலிய தானியங்களிலிருந்து செய்யும் பலவகைப் பீர் முதலியன பிரையேறிய மதுபான வகுப்பைச் சேர்ந்தவை. பீர் என்றழைக்கப்படும் பல மதுபானங்களில் நூற்றுக்கு 2 முதல் 8 பங்குகள் வரை மஸ்து என்னும் மயக்கந் தரும் விஷம் உண்டு. இருபத்துநாலு மணிநேரம் நுரைக்கவிடப்பட்ட கள்ளில்

நூற்றுக்கு 10 பங்கு மஸ்துவாக இருக்கும். உவைன் என்று அழைக்கப்படும் பலவகைத் திராக்ஷ ரசங்களில் மஸ்து நூற்றுக்கு 10 முதல் 25 வரை உண்டு.

சாராயம், ஜின், உவிஸ்கி, ரம், பிராந்தி முதலியன காய்ச்சி வடித்த மதுபான வகுப்பைச் சேர்ந்தவை. இவைகளில் மஸ்து அதிகமாயிருப்பதால் இவைகளைச் சாப்பிடுகிறவர்கள் அதிக வெறிகொள்வதன்றி அதிகத் தீங்குக்கு ஆளும் ஆகிறார்கள். தானியங்களிலிருந்து எடுக்கப்படும் ஜின் மதுபானத்தில் நூற்றுக்கு ஏறக்குறைய 38 பங்கும், வாற்கோதுமை முதலியவைகளி லிருந்து எடுக்கப்படும் உவிஸ்கி மதுபானத்தில் 45 பங்கும், கரும்பு முதலியவைகளிலிருந்து எடுக்கப்படும் ரம் மதுபானத்தில் 48 பங்கும், திராக்ஷரசம் முதலியவைகளிலிருந்து எடுக்கப்படும் பிராந்தி மதுபானத்தில் 53 பங்கும் மஸ்து என்னும் அக்கினித் திராவகம் எனக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

15. மதுபானங்கள் போஜன பதார்த்தங்கள் அல்ல (Alcoholic Drinks are not Articles of Food). மதுபானங்கள் தாகத்தைத் தீர்க்காமல் குடிக்கக் குடிக்கத் தாகத்தை அதிகப்படுத்துவதினால் அவைகள் பானங்கள் அல்லவென்று முன்னே சொன்னோம். அவைகள் போஜனமாகா என்பதைப்பற்றி இப்போது சொல்லப்போகிறோம். போஜனத்தின் தொழில்கள் இரண்டு-சரீரத்தை வளர்ப்பதும், சரீரத்துக்கு அனல் தருவதும். எந்த வஸ்து சரீரத்திலுள்ள கருவிகளுக்குத் தீங்கு விளைவிக்காமல் சரீரத்தின் பாகங்களை வளர்க்கிறதோ, அல்லது சரீரத்தின் சீதோஷ்ண நிலையை ஓர் அளவில் காக்க உதவுகிறதோ அது போஜனம். முட்டையின் கருவிலுள்ள அல்பூமன் (Albumen), பாலி

ளுள்ள கேசின் (Casein), இறைச்சியிலுள்ள வ்வைபிரின் (Fibrine), பயறுகளிலுள்ள லெகுமின் (Legumen), தானியங்களிலுள்ள குளூற்றன் (Gluten) என்னும் வஸ்துக்களெல்லாம் நைற்றிரோஜன் என்னும் உப்பு வாயுவாலானவைகளாதலால் தசையை வளர்க்கத்தக்கவைகள் என்று நமது குடும்ப நிர்வாஹ சாஸ்திரத்திலும், சுகாதார சாஸ்திரத்திலும் கற்றிருக்கிறீர்கள். சுரங்க பதார்த்தஞ் சேர்ந்தவைகள் எலும்பை வளர்ப்பதால் அவைகளும் போஜனபதார்த்தங்கள் என்று கற்றிருக்கிறீர்கள். ஆனால் தசையையும் எலும்பையும் வளர்க்கும் வஸ்துக்களில் ஒன்றாயினும் அல்கோஹால் என்று சொல்லப்படும் மஸ்தில் இல்லை. ஆதலால் அது போஜனமல்ல. மஸ்து சேர்ந்திருக்கும் பானங்கள் சரீரத்தை வளர்க்கும் போஜனபதார்த்தங்களிலிருந்து செய்யப்படுகிறபடியால் மது பானங்கள் சரீரத்தை வளர்ப்பதற்குரியனவென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அப்படி நினைப்பதற்கு இடமில்லை. ஏனென்றால், தேகத்தை வளர்க்குஞ் சத்துள்ள திராக்ஷை முதலிய பழங்களும், வாற்கோதுமை முதலிய தானியங்களும் மதுபானங்களாக்கப்படும் முறையால் பதமழிந்து, சத்துக் கெட்டுத் தேகத்தை வளர்ப்பதற்கு உதவாதவைகளாகின்றன. மஸ்து மிகக் குறைவாயுள்ள பீர் முதலாய் போஜன பதார்த்தமாகாது. அதில் 1666 பங்குகளில் ஒருபங்கு மாத்திரம் தேகத்தை வளர்க்கத்தக்கது. ஆதலால் பீர் என்னும் மதுபானத்தை போஜனமாக உபயோகிக்கிறவன் ஒரு அரிசி மணிக்காக ஒரு சாக்கு உமியைச் சாப்பிடுகிறவனுக்கு ஒப்பாவான்.

மதுபானம் அனலைத் தருகிறது என்பதும் அபத்தம். மதுபானம் அருந்தினவன் ஆரம்பத்தில் குளிர்நீங்கி அனல்

உண்டானதுபோல் உணருகிறான். அவன் பக்கத்தில் நிற்கிறவன் அவனுடைய முகஞ் சிவந்துபோகிறதைக் கண்டு அவனுக்கு அனல் உண்டாகிறதென்று எண்ணிக்கொள்ளலாம். ஆனால் இவையெல்லாம் மாயமே. அவனுடைய நாடி கதித்தடிப்பது உண்மையாயினும் சரீரத்தின் சீதோஷ்ண நிலையைக் குறைப்பதே மஸ்துவின் தொழிலெனவும், ஆகையால் மதுபானம் இந்தக் காரணத்தையிட்டும் போஜன பதார்த்தமல்லவெனவும் சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மதுபானம் அருந்துகிறவனைப் பார்க்கிலும் மதுபானம் அருந்தாதவனே குளிரை இலேசாய்த் தாங்கத்தக்கவனாயிருக்கிறான். கொதிக்கிற பாலை வெண்கலப்பாத்திரத்திலும் மட்பாத்திரத்திலும் ஊற்றிவைத்து, உடனே பாத்திரங்களைத் தொட்டுப் பார்த்தால் வெண்கலப்பாத்திரம் தொடக்கூடாதபடி சூடாயிருப்பதையும், மட்பாத்திரம் கையிலெடுக்கத்தக்கதாயிருப்பதையும் உணர்ந்தறியலாம். இதைமாத்திரம் அறிந்த அறிவீனர் வெண்கலப்பாத்திரத்தில் சுடுபாலை ஊற்றிவைத்தால் அது ஆறுவதற்கு நேரஞ் செல்லுமெனவும், சுடுபாலை சீக்கிரம் ஆற்ற மட்கலமே ஏற்றது எனவுஞ் சொல்லி, சொன்னதற்கேற்க நடந்துகொள்ளுகிறார்கள். ஆனால் சற்றுநேரம் பொறுத்து அவைகளிலுள்ள பாலைத் தொட்டுப்பார்த்தால் வெண்கலப் பாத்திரத்திலிருப்பது ஆறிக் குளிர்ந்துபோயிருக்கையில் மட்கலத்திலுள்ளது சுட்டுக்கொண்டிருக்கும். இதற்குக் காரணம் செம்பு முதலிய லோகங்கள் மரம், மண் முதலியவைகளைப் பார்க்கிலும் உஷ்ணத்தைச் சீக்கிரம் கிரகித்து அதைச் சீக்கிரம் பரவச்செய்கிற வஸ்துக்களாய் (Good conductors of heat) இருப்பதுதான். இவ்வாறே மதுபானம் அருந்தினவன் செப்புப் பாத்திரத்தைப்போல் தேக உள்

அனலை சரீரத்தின்மேற் பரப்புக்குக் கொண்டுவந்து ஆகாயத்தில் பரவிப்போகச் செய்கிறதால் அவன் தேகம் சீக்கிரத்தில் குளிர்ந்துபோகிறது. ஆனால் மதுபானம் அருந்ாதவனோ மட்கலத்தைப்போல் தேக உள் அனல் பரவாதபடி அதைக் காக்கத்தக்கவனா யிருக்கிறபடியால் அவன்தேகம் சீக்கிரங் குளிர்ந்துபோவதில்லை. வாஸ்தவத்தில் மதுபானம் அனலைத் தருகிற வஸ்து அல்லவென்பதை இயற்கை அறிவு (Common Sense) உடையவர்கள் கண்டுகொள்ளலாம். ஆகவே மதுபானம் தேகத்தை வளர்த்து, அதைப் பலப்படுத்தி, அதற்கு அனல் தருவதற்கு ஏற்ற வஸ்து அல்லாதபடியால் அது போஜனமல்லவென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும்.

16. மதுபானங்கள் உற்சாகந் தருவன அல்ல (Alcoholic Drinks are not Stimulants). மதுபானங்கள் உற்சாகந் தரும் வஸ்துக்களென பேதை ஜனங்கள் நம்பி மோசம் போகிறார்கள். இயற்கை அறிவு (Common Sense) உடையவர்கள் மதுபானங்கள் உற்சாகந் தருவன அல்ல என்பதை இலேசாய்க் கண்டுகொள்ளலாம். மதுபானம் அருந்தினவனுக்கு ஆரம்பத்தில் ஓர்வகைக் கிளர்ச்சி உண்டாகிறது; அவன் மனம் ஓர்வகையாய் உற்சாகமடைந்து எண்ணங்கள் பறந்தோடுகின்றன; அவன் நாவின் கட்டவிழ்ந்து விரைவாய்ப் பேசுகிறான்; ஓடியாடித் திரிகிறான்; தேகமெங்கும் ஓர்வகைச் சோபிதம் உண்டாவதால் சந்தோஷம் உள்ளவனாக விளங்குகிறான்; ஆயினும் இவைகளுக்குப்பின் அவன் தளர்ச்சியடைந்து, உற்சாகங்குன்றி, நம்பிக்கையற்றவன்போ லிருப்பதைக் கவனியாதிருக்கிறார்கள். உதைப்பும் அதைப்பும்

ஒன்றற்கோன்று சமமும் எதிருமானவை (Action and re-action are equal and opposite) என்று நியுற்றன் சாஸ்திரியார் கண்டுபிடித்த பிரமாணம் இந்த விஷயத்திலும் உண்மையே. பகலெல்லாம் கற்பாரமேற்றிய வண்டியை இழுத்த எருதுகளில் ஒன்று மாலை மயங்கும் நேரத்தில் வழியில் விழுந்து நடக்க வசமற்றிருக்கையில், வண்டிக்காரன் அதன் கண்களில் புகையிலைப் பொடியைப்போடவே, களைத்து இளைத்துக்கிடந்த காளை அதிர்ச்சியடைந்து எழுந்திருந்து, கண்களை மூடிக்கொண்டு கடுக விரைந்தோடியது; இதைக் கண்ணுற்ற வண்டிக்காரனுக்கு இருந்த சந்தோஷத்திற்கு ஓர் அளவில்லை; அடுத்த காளையை அடித்து ஒட்டிக்கொண்டு அவைகளோடுகூட தொங்குதொங்கென ஓடினன்; சுமார் ஒரு மைல்தூரம் ஓடினபின் அந்த ரிஷபம் செத்து விழுந்தது; அடுத்த ரிஷபமும் பாரந்தாங்கமாட்டாமல் செத்ததுபோல் விழுந்தது; வண்டிக்காரனுங் களைத்துப்போய்ப் பெருமூச்செறிந்து, பக்கத்துக் கிராமத்துக்கு நடந்துபோகச் சக்தியற்று பாதையோரத்தில் படுத்துக் காரிரவைக் கழிக்க நேரிட்டது. இவ்வண்ணமாகவே மதுபானத்தை அருந்துகிறவர்கள் முன்பு சற்று உற்சாகமடைந்தாலும் பின்பு உள்ள உற்சாகத்தையும் இழந்து நஷ்டப்படுவதல்லாமல் இனி மதுபானத்தின் அளவை அதிகப்படுத்தினுலன்றி அந்தப் போலி உற்சாகத்தை அடையக்கூடாதவர்கள் ஆகிறார்கள். ஆதலால் மதுபானம் உற்சாகந்தரும் வஸ்து என்பது மாயம். மதுபானக் குடியர் குடித்தவுடன் சற்று உற்சாகமாய் வேலைசெய்த போதிலும் அவர்கள் வேலை போலியும், அளவில் மதுபானம் அருந்ாதவர்கள் வேலைக்கு வந்தெட்டாததுமாயிருக்கும். இதனுல்தான் ஐரோப்பாவில் நடக்கும் பயங்கர யுத்தத்திற்கென்று இங்கிலாந்தில் யுத்தோபகரணங்கள் செய்கிறவர்கள் மதுபானம் அருந்தலாகாதெனுஞ் சட்டம் பிறந்திருக்கிறது.

---

# IV. அதிகாரம்.

## சரீரத்தில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Body).

17. சரீரத்தில் மஸ்து செய்யுங் கிரியை (The Effects of Alcohol in the body). மஸ்துவானது உறுத்துகிறதும் அல்லது எரிக்கிறதும், மயக்கந்தருவதுமான கொடிய விஷம் என்றே சொல்லவேண்டும். கலப்பில்லா சுத்த மஸ்துவை சரியான அளவு குடித்தால் மரணம் உடனே சம்பவிக்கும். மிகக் குறைந்த அளவாய் வெகுகாலஞ் சாப்பிட்டுவந்தால் ஆயுசு குறைந்துபோம். கள், சாராயம், பீர், பிராந்தி, உவைன் முதலிய மதுபானங்களிலுள்ள கலப்பு மஸ்துவும் விஷத் தன்மையுள்ளதே. மதுபானத்தை அருந்தியவுடன் மஸ்துவாகிய சத்துராதியை வெளியேற்ற சரீரத்திலுள்ள ஒவ்வொரு யந்திரமும் படும்பாட்டை விவரித்து முடியாது. இதைக் கண்ணுறும் பேதைச் சனங்கள் மதுபானம் உற்சாகந்தரும் வஸ்து என்று சாதிக்கிறார்கள். சற்றுநேரம் பொறுத்து குடித்தவன் நடை தள்ளாடி, வாயுளறி, சண்டைகளில் தலையிட்டு, சிற்றின்ப ஆசைகொண்டு, வெறியனாய் விளங்குவதைப் பார்ப்போர் முதலாய்க் கச்சை கட்டிக்கொண்டு மதுபானத்துக்காகப் பேசுகிறது பேராச்சரியமல்லவா? நிறைகுடியன் நிலைதவறி விழுந்தேபோகிறான்; தேகங் குளிர்ந்து செத்தவன்போல் கிடக்கிறான்; அவன் கிடந்தபடியே செத்துப்போகிறதும் உண்டு. என்றாலும் மதுபானத்துக்காகப் பரிந்து பேசுகிறவர்கள் தொகை

குறைந்த பாட்டைக்காணேம். சரீரத்திலுள்ள ஒவ்வொரு யந்திரத்திற்குஞ் செய்யுங் கேடுபாடுகளை இங்கு விவரித்து முடியாது ; ஆதலால் அவைகளில் முக்கியமானவைகளுக்கு மாத்திரம் மஸ்துவால் விளையுந் தீங்குகளைக் கீழ் எடுத்துச் சொல்வோம்.

18. இரத்தாசயத்தில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Heart). இரத்தாசயமானது இரத்தமிருக்குந் தொட்டியாயும், இரத்தம் இறைக்குஞ் சூத்திரமாயு மிருக்கிறது. அது சுருங்கி விரிவதால் சுத்த இரத்தத்தைச் சுத்த இரத்த நாளங்களுக்குள் இறைத்து, அசுத்த இரத்தத்தை அசுத்த நாளங்கள் மூலமாய்ப் பெற்றுக் கொண்டு, அந்த அசுத்த இரத்தத்தை இறைத்துக் குழாய் வழியாய் நுரையீரல்களுக்கனுப்பி, அது அங்கு சுத்த ஆகாயத்தால் சுத்திகரிக்கப்பட்டு சுத்த இரத்தமாக மாறியபின் அதை மறுபடியும் பெற்றுக்கொள்ளுகிறது. நாம் அமைதியாயிருக்கும்போது நமது இரத்தாசயம் நிமிஷத்துக்கு ஏறக்குறைய 72 முறை துடித்து இரத்தத்தைத் தேகமெங்கும் அனுப்புகிறது. குடிக்கும் மதுபானத்திலுள்ள மஸ்துவானது இரத்தாசயத்தை மட்டுக்கு மிஞ்சித் துடிக்கச் செய்து, மட்டுக்கு மிஞ்சி இரத்தத்தைத் தேகமெங்கும் அனுப்பச் செய்கிறது ; இரத்தாசயம் மட்டுக்கு மிஞ்சிய வேலைசெய்ய வேண்டியதாயிருப்பதால் அதன் தசைநார்கள் படிப்படியாய் பலவீனம் அடைந்து அதின் தொழில் குன்றிப்போகிறது. காப்பிலாரிஸ் (Capillaries) என்றழைக்கப்படும் நுண்ணிய இரத்தநரம்புகள் சக்திகெட்டு இரத்தந் தாராளமாய்ச் செல்லக்கூடாதவைகளாகின்றன. நுரையீரல்களும், மூளையும், ஜீரணக்கருவிகள் முதலியவைகளும் மட்டுக்கு மிஞ்சிய இரத்தம் கட்டிக்கிடக்க விடப்படுகின்றன.




*Fig.* 2. இரத்த ஓட்டம் (Circulation of Blood).

---

1. இரத்தாசயம் (Heart); 2. பெரிய சுத்த இரத்தக்குழாய் (Aorta); 3. கெட்ட இரத்த நாளம் (Vein); 4. நுரையீரல் இரத்த நாளம் (Pulmonary Artery); 5. சுத்த இரத்த நாடி (Artery); 6. பெரிய கெட்ட இரத்தக் குழாய் (Superior vena cava); 7. குண்டிக்காய்களிலுள்ள இரத்த நாளங்கள் (Veins and arteries of the Kidneys).

இரத்தநீர், கார்பஸ்ல்ஸ் (Corpuscles) என்று சொல்லப் படும் தட்டையும் வட்டமுமான நுண்ணிய அணுக்கள்,

வ்வைபிரின் (Fibrine), அல்பூமன் (Albumen), கொழுப்பு வஸ்து, பலவகை உப்புகள் முதலிய பொருட்கள் இரத்தத் தின் முக்கிய சேர்க்கைகளாம். கார்பஸ்ல்ஸ் என்னும் நுண்ணிய அணுக்கள் இரு தரமானவை. இரத்தநீரில் மிதக் கும் சிறு சிவப்பு அணுக்களாகிய ரெட் கார்பஸ்ல்ஸ் (Red Corpuscles) ஓர் தரம்; இவைகள் மத்தியில் காணப்படும் வெள்ளை அணுக்களாகிய ஹோய்ற்று கார்பஸ்ல்ஸ் (White corpuscles) மற்ற தரம். ஒரு துளி இரத்தத்தில் ரெட் கார் பஸ்ல்ஸ் 50 லட்சம் வரை உண்டு. இந்தச் சிவப்பு அணுக் கள் நாம் சுவாசிக்கும் ஆகாயத்திலுள்ள பிராணவாயுவில் அதிகப் பாகத்தைக் கிரகித்து சரீரத்தின் வெளிப்புறம் வரை யுள்ள தசைநார்களுக்குக் கொண்டுபோய், அங்குண்டாகும் கரியமலவாயுவில் அதிகப் பாகத்தைக் கிரகித்து, நுரையீரல் களுக்குத் திரும்பக் கொண்டுவந்து, பிராணவாயுவாக அதை மாற்றுகிறது; இவ்விதமாய் அவைகள் இரத்தத்திலுள்ள பொருட்களில் மஹா முக்கியமானவைகளாய் இருக்கின்றன. கண்ணாடியைப்போல் ஒளி ஊடுருவத்தக்க வெள்ளை அணுக் களாகிய ஹோய்ற்று கார்பஸ்ல்ஸ் சிவப்பு அணுக்களைவிடத் தொகையில் குறைந்தாலும் உருவத்தில் சற்று பெரிதாயிருக் கும்; 400 சிவப்பு அணுக்களுக்கு 1 வெள்ளை அணுவாக இருக் கும். இவைகள் இரத்தத்தில் பிரவேசிக்கும் விஷ வித்துக் களைப் பிடித்துக் கொன்றுவிடுகின்றன. நம்மில் அநேகர் காய்ச்சல் முதலிய வியாதிகளிலிருந்து காக்கப்படுவது இவை களால்தான். ஆகையால் இவைகள் நமது காணப்படா சரீர காவலாளிகள் (Invisible Body-guards) என்று அழைக் கப்படுகின்றன. மஸ்து கொஞ்சமென்கிலும் இரத்தத்தில் சேர்ந்தால் வட்டமாயிருக்கும் சிவப்பு அணுக்களும், வெள்ளை

அணுக்களும் முட்டை வடிவமாகி, தங்கள் தொழிலைச் செய்யச் சக்தியற்றவைகளாகின்றன. இதற்குக் காரணம் மஸ்து நீரைக் கிரகிக்குந் தன்மையுள்ளதாகையால் இரத்த நீரையும், இவ்வணுக்களிலுள்ள நீரையும் உறிஞ்சுவதுதான். மதுபானங் குடிப்போர் தாகமடைவதற்கு இதுவே காரணம். நீர் இழுக்கப்பட்டதால் அணுக்கள் கட்டிப்போகவே சரீரம் வியாதிக்கிடமாகி, மரணத்திற்குட் படுகிறது.

இரத்தநீரில் உள்ள வ்வைபிரின் சரீரங்காயப்பட்டு இரத்தம் ஓடும்போது அதைக் கட்டிப் போகச்செய்து ஓடாதபடி தடுக்குந் தன்மையுள்ளது; மஸ்து இரத்தத்தில் சேருமானல் இதன் தன்மை கெட்டுப்போவதால் காயப்பட்டவிடத்திலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டேயிருக்கும். இதனல் மதுபானக்குடியர் காயப்படுங்கால் மோசத்துக்குள்ளாகிருர்கள். மேலும் மஸ்து வ்வைபிரின் என்னும் வஸ்துவையுங் கட்டிப்போகச்செய்வதால் இரத்த ஓட்டம் தடைப்படுகிறதுமல்லாமல் மரணமுஞ் சம்பவிக்கிறதுண்டு. இரத்த நீரிலுள்ள உப்புகளும் மஸ்து செய்யுங் கிரியையினல் அங்கங்கு தங்கிப்போவதால் குடியர்களுடைய தசைநார்கள் பலட்சியப்பட்டு, நெருக்க மடையும்போது இலேசாய் அறுந்துபோம்.

"இரத்தம் ஜீவன்" என்று சொல்லப்படுகிறது. இரத்தத்திற்கு உறைவிடமாகிய இரத்தாசயமும், இரத்தத்தைச் சுத்திகரிக்கும் நுரையீரல்களுமே ஜீவாதாரக் கருவிகள். இவ்வருமையான கருவிகள் செய்யுங் கிரியைகள் மஸ்துவினல் குறைக்கப்படுவதால் பலவகை வியாதிகளும் மரணமும் நேரிடும். ஆதலால் மஸ்து ஜீவாதார வஸ்துவாயிராமல் ஜீவநாசத்துக்கு ஏதுவான நச்சுப் பதார்த்தமாயிருக்கிறது.




*Fig*. 3. மூளை (Brain).

1. பெரு மூளை (Cerebrum) ; 2. சிறு மூளை (Cerebellum); 3. ஸ்பைனல் கார்டு (Spinal cord).

19. மூளையில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Brain). மூளையே புத்திக்கு ஆதாரம். மூளையின் மேற்பகுதி பெருமூளை (Cerebrum) என்றும், தலையின் பின்பக்கத்திற்கு அடியிலிருக்கும் சிறுமூளை (Cerebellum) என்றும் அழைக்கப்படும். முதுகெலும்புக் குள்ளிருக்கும் ஸ்பைனல் கார்டு (Spinal Cord) என்னும் சாம்பல் நிறமான மெல்லிய வஸ்துவும் மூளையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது; ஆனால் மூளைக்கில்லாத பரிச உணர்ச்சிஸ்பைனல் கார்டுக்கு உண்டு. மூளையிலிருந்து 12 சோடு நரம்புகள் புறப்பட்டு, கண்களுக்கும், காதுகளுக்கும், மூக்குக்கும், மற்ற அவயவங்களுக்குஞ் செல்லுகின்றன. இவைகளில் சில வெளிச்சத்தையும், சில தொனியையும், சில மோப்பத்தையும், சில ருசியையும் உணர்ந்தறியும். 31 சோடு நரம்புகள்

ஸ்பைனல் கார்டின் இரு புறங்களிலிருந்து புறப்பட்டு ஒன்ருய்ச் சேர்ந்து தேகமெங்குஞ் செல்லுகின்றன ; ஸ்பைனல் கார்டின் முற்புறத்திலிருந்து புறப்படும் நரம்புக்கு சலனநாடி (Motor nerve) என்றும், பிற்புறத்திலிருந்து புறப்படும் நரம்புக்குப் பரிசநாடி (Sensory nerve) என்றும் பெயர்; சலனநாடி அறுபட்டால் சரீரத்தின் அப்பாகத்தை அங்குமிங்கும் ஆட்ட முடியாது; பரிசநாடி அறுபட்டால் அதைச் சேர்ந்த பாகமெல்லாம் மரத்துப்போம்.

மஸ்துவிசேஷமாய் மூளையையும் ஈரலையுந் தாக்குகிறது; ஆனல் மூளையில்தான் அதன் கோஷ்டம் வெளிப்படையாய்த் தெரிகிறது. மஸ்து மூளையையும் மூளையைச் சேர்ந்த நரம்புகளையும் வேறுபா டடையச் செய்கிறது; அவைகள் கட்டுவிட்டுப் போவதினல், அல்லது கொழுப்பு அணுக்கள் இடையில் வருவதால் அவைகள் மெதுவடைகின்றன; அவைகள் சுருங்கியும் போவதுண்டு. மஸ்து மூளைக்கேறி யிருக்கையில் குடித்தவன் மதிமயங்கி பைத்தியகாரனைப்போல் உளறி பைத்தியகாரனைப்போல் பல கோரணிகள் செய்வான். பழக்கம் மிஞ்சி வழக்கமானபின் அவன் பைத்தியகாரனுய்ப் போவதுமுண்டு. மஸ்து மூளை நரம்புகளைத் தாக்குவதால் குடிகாரனுடைய பார்வை,கேள்வி,மோப்பம், சுவை முதலியன மந்தப்படுவதும், ஒருத் தலையிடி முதலியவைகளால் பீடிக்கப்படுவதும் ஆச்சரியமல்ல; மஸ்து ஸ்பைனல் கார்டின் நரம்புகளையுந் தாக்குவதால் குடிகாரன் தள்ளாடி விழுவதும் ஸ்மரணையற்றுக் கிடப்பதும் இயல்பு; குடி மிஞ்சி அவன் பாரிச வாயுவால் பீடிக்கப்படுவதுமுண்டு. இந்த நரம்புகள் சித்தத்திற்கு அடங்கியிருக்கும் தசைநார்களின் அசைவுகளை ஆண்டு நடத்தச் சக்தியற்றுப்போகிறது மல்லாமல் சித்தத்திற் கடங்கா

சுவாசக் கருவிகள், ஜீரணக் கருவிகள், இரத்தவோட்டக் கருவிகள் முதலியவற்றின் கிரியைகளை ஒழுங்குப்படுத்தக் கூடாமற் போகிறபடியால் சரீரம் பல நோய்களுக் குட்பட்டு மரணத்திற்குத் தீவிரிக்கிறது.

மஸ்து சரீரத்துக்கும் மூளைக்குஞ் செய்யுந் தீங்குகளை விட அது மனுஷனுடைய சன்மார்க்க குணத்துக்குச் செய் யுந் தீங்கே மகா கொடியது; மஸ்துவின் உறுத்துந் தன்மை அவனுடைய இழிவான தன்மையை எழுப்பிவிட்டு, அதி னுடைய மயக்குந் தன்மை அவனை மதிமயங்கிக் கிடக்க விடவே, அவன் தான் செய்வது இன்னதென்று அறியாத வனாய்ப் பாவக் கிரியைகளைக் கூசாமல் செய்கிறான். வரவர ஞாபக சக்தியும், பிறர் சொல்லுகிறதைக் கவனிக்குஞ் சக்தி யுங் குறைந்துபோய், மன உறுதி அற்றவனும், இது சரி இது தப்பென்று பகுத்தறியுஞ் சக்தி அற்றவனுமாகிறான்.

20. ஈரலில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Liver). ஈரலானது மனுஷ சரீரத்தில் கோளங்களாலாகிய உறுப்புகளில் பெரிது; அது சிவந்த கபிலநிறமானது. அது அடிவயிற்றுக்குள் உயர இடது பக்கத்திலிருக்கிற இரைப்பைக்கு நேராய் வலது பக்கத்தில் இருக்கிறது; அது ஏராளமான சிற்றறைகள் சேர்ந்துண்டா னது. இரத்த நாளங்கள் மூலமாய் தனக்குள் பரவிச் செல் லும் இரத்தத்திலிருந்து பித்தம் (Bile) என்னும் ஓர்வகை ஜீரணநீரை வடித்தெடுத்து, பித்துப்பைக்குள் சேர்த்து வைத்து, இரப்பையிலிருந்து குடலுக்குச் செல்லும் அன்னப் பாகோடு மணிக்குடலில் கலக்கச்செய்து ஜீரணத்துக்கு உதவிசெய்கிறது; மேலும் அது விஷத் தன்மையுள்ள சில

பதார்த்தங்களை இரத்தத்திலிருந்து நீக்கும் கருவியாயும் இருக்கிறது. ஆகையால் ஈரல் தன் இரண்டு தொழில்களையுஞ் செய்யாதிருக்குமானால் ஜீரணம் தடைப்படும்; விஷபதார்த்தங்கள் சேர்வதால் பித்த மயக்கம், காமாலை முதலிய பல நோய்கள் உண்டாகும்.




*Fig.* 4 நெஞ்சுக்குள்ளும் அடிவயிற்றுக்குள்ளு மிருக்கும் உறுப்புக்கள்.

**(THE ORGANS OF THE THORAX AND ABDOMEN.)**

---

1. நுரையீரல்கள் (Lungs); 2. இரத்தாசயம் (Heart); 3. இரைப்பை (Stomach); 4. மண்ணீரல் (Spleen); 5. ஈரல்

(Liver); 6. பெருங் குடல் (Large Intestines); 7. சிறுகுடல் (Small Intestines).

மஸ்து பிரகாசமான மஞ்சள்நிற பித்தநீரை பச்சையான, சில வேளைகளில் கருப்பான நிறமாக்கிவிடுகிறது; நீர் மயமான பித்தநீரைத் தடிப்பாக்கி விடுகிறது; ஈரலை முதலாவது வீங்கப்பண்ணி அதன் தசைநார்களைத் தடிக்கச்செய்கிறது; கொஞ்சக் காலத்துக்குப்பின் அது சுருங்கிக் கடினமாகிவிடச் செய்கிறது. அப்போது குடிகாரனுடைய கால்கள் வீங்க ஆரம்பிக்கும். மதுபானங் குடித்து ஈரல்வியாதிக்குட் படுகிறவர்கள் தாங்கள் வியாதியஸ்தர் என்பதை ஆரம்பத்தில் அறிய முடியாது; ஆதலால் அவர்கள் எச்சரிப்பில்லாமலே மரணத்துக்குத் தினந்தினம் அடுத்துப்போகிறார்கள். மஸ்து இரைக்குடலில் பிரவேசித்தபின் அது தாக்கும் முதல் உறுப்பு ஈரல்; ஆதலால் மற்ற உறுப்புக்கள் சீர்கேடடையுமுன் ஈரல் சீர்கேடடைகிறது; ஈரல் சீர்கேடடைவதால் மற்ற உறுப்புக்களுங் குணங்கிப்போகின்றன.

21. இரைப்பையில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Stomach). ஜீரணக்கருவிகளிலெல்லாம் முக்கியமானது இரைப்பை; அது ஓர்வகைச் சவ்வாலான பெரிய பை; அது அடிவயிற்றுக்குமேலே இடது பக்கத்திலிருக்கிறது. அது மூன்றடுக்குச் சட்டைகளால் அமைந்திருக்கிறது; நடுவிலுள்ளது தசையாலானதும் பலமுள்ளதுமானது; அதன் தசைநார்கள் செங்கோணப்பட ஒன்றையொன்று சந்திப்பதால் போஜனத்தை நன்றாய்க் கிளர்வதற்கு உபயோகப்படுகின்றன. உட்சட்டையில் ஏராளமான குழல்போன்ற கோணங்களுண்டு; போஜனம் இவைகளைத் தொட்டமாத்திரத்தில் ஜீரணநீர் (Gastric Juice)

இவைகளிலிருந்து சுரக்கும். ஜீரணநீரே ஜீரணத்திற்கு முக்கிய கர்த்தா.




*Fig*. 5. ஜீரணக் கருவிகள்.

(**DIGESTIVE ORGANS**).

---

1. இரைப்பை (Stomach); 2. ஈரல் (Liver); 3. ஆகாரக் குழாய் (Gullet); 4. பாங்கிரியாஸ் (Pancreas) என்று சொல்லப்படும் கணையம் அல்லது இனிப்பு ரொட்டி; 5. பைலோரஸ் (Pylorus) என்று சொல்லப்படும் மணிக்குடல்; 6. ஸ்பிளீன் (Spleen) என்று சொல்லப்படும் மண்ணீரல்; 7. பித்துப்பை (Gall bladder); 8. பெருங்குடல் (Large intestines); 9. சிறுகுடல் (Small intestines); 10. மலக்குடல் (Rectum).

மஸ்து குடித்த அளவுக்கும் பழக்கத்துக்குந் தக்கதாய் இரைப்பையில் கிரியை செய்யும்; மஸ்து தசைநார்களை உறுத்திக் கெடுக்குந் தன்மையுள்ளதாகையால் இரைப்பையின் மெல்லிய சோமை சவ்வுகளுக்கு அது செய்யுங் கெடுதியைப் போல் மற்ற எந்த உறுப்புக்கும் அது செய்ய முடியாது. மஸ்துவை அதிகமாய்ச் சாப்பிட்டால் இரைப்பையின் சட்டைகள் வீங்கிப் புண்ணுகும்; கொஞ்சமாய்ச் சாப்பிட்டால் ஜீரணநீர் ஊறத் தடைப்படுவதால் அஜீரணமுண்டாகி அநேக வியாதிகளுக்கு அஸ்திபாரம் போடுவதாகும். ஜீரணத்திற்கு முக்கிய கர்த்தாவாகிய ஜீரணநீரின் முக்கிய சேர்க்கையாகிய பேப்சின் (Pepsine) என்னுங் கட்டிப் பொருள்தான் போஜனத்தைக் கரைக்குந் தன்மையில் நிகரற்றது. பேப்சின் மஸ்துவில் கரையாதாகையால் அது தன் தொழிலைச் செய்யத் தடைப்படுகிறது. ஆகையால் மஸ்து போஜனத்தைக் கடினப்படுத்தி, ஜீரண நீரிலுள்ள பெப்சினை தன் தொழிலைச் செய்யாமல் ஓடவிடுவதால் ஜீரணத்துக்குத் தடையாயிருக்கிறது. மஸ்து ஈரலிலுள்ள இரத்தத்திலுள்ள பிராணவாயுவை உறிஞ்சிக் கொள்ளுகிறபடியால் சிறு காயப்பட்டாலும் அது ஆறுவது கடினம்; மரணமும் நேரிடுகிறதுண்டு. குடிக்கிறவனுக்கு மஸ்து செய்யுந் தீங்கு தெரியாதாயினும் மஸ்து இரைப்பையில் செய்யுந் தீங்கை டாக்டர் பூமான்ற் (Dr. Beaumont) என்ற பேர்பெற்ற சாஸ்திரி பூர்த்தியாய்த் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

22. குண்டிக்காய்களில் மஸ்து செய்யுங் கிரியை (The Effect of Alcohol in the Kidneys). அவரைவிதை உருவமும் சிவந்த மஞ்சள் நிறமும் உடைய குண்டிக்காய்கள் இரண்டும் உள்ளே முதுகெலும்புகளுக்கு மத்தியில் வலது

பக்கத்தில் ஒன்றும் இடது பக்கத்தில் ஒன்றுமாக இருக்கின்றன (இரண்டாம் படம் பார்). இரத்தத்தில் மட்டுக்கு மிஞ்சியிருக்கும் நீரையும், சரீரத்திலுள்ள உப்பு வாயு முதலிய கழிவு பொருட்களேயும் இவைகள் பிரித்தெடுத்து, மூத்திரமாக ஊற்றும் பெட்டிக்கு அனுப்பி, அவைகளேச் சரீரத்திலிருந்து வெளிப்படுத்துவதற்கு மூலகாரணமாயிருப்பதே இவைகளின் வேலே. ஆதலால் குண்டிக்காய்களே தோல், நுரையீரல், குடல் முதலியவைகளேப்போல் சரீரத்திலுள்ள கழிவு பதார்த்தங்களே வாரிக்கொண்டுபோகும் தோட்டிகள் என்று சொல்லவேண்டும். சென்னபட்டணத்துத் தோட்டிகளுடைய வேலேயைப்போலவே இவைகளுடைய வேலேயுஞ் சரீரசுகத்துக்கு இன்றியமையாததா யிருக்கிறது.

மஸ்துவானது இந்த உறுப்புக்களேயுஞ் சீர்கேடடையச் செய்து, இவைகளிலுள்ள குழாய்களேச் சுருங்கி விரியுந் தன்மை யற்றவைகளாக்கி விடுகின்றன. இரத்தத்திலுள்ள அல்பூமன் என்னும் வஸ்துவும் கழிவுபொருள்போல் கழிந்து போவதால் இரத்தத்தை வடித்தால்போல் சரீரமும் பலங் குன்றிப் போகிறது. குடிகாரனுக்கு இவ்வுறுப்புக்கள் சீர்கேடடைவது தெரியாதாகையில் எச்சரிப்பில்லாமலே பல நோய்களுக்குட்படுகிருன்.

## V. அதிகாரம்.

### குடியால் விளையுந் தீங்குகள் (The Evils of Drink).

23. குடியால் விளையுந் தீங்குகள் (The Evils of Drink). குடியால் விளையுந் தீங்குகளுக்கு ஒரு தொகையுமில்லை, வகையுமில்லை. இராட்சியங்கள் நிலைகுலைந்து போவதற்கும், கோத்திரங்கள் கருவறுக்கப்படுவதற்கும் குடி என்னுங் கூளியே முக்கிய காரணமாயிருக்கிறது. போஜன பதார்த்தங்கள் அழிக்கப்பட்டு மதுபானங்களாக மாற்றப்படுவதால், "ஐயோ! ஜீவாதார வஸ்துக்களின் விலை அதிகப்பட்டுப் போயிற்றே; இனி எப்படித் தழைத்தோங்குவது!" எனத் திகைக்குந் தேசங்கள் எத்தனை? "மனுஷர் பலங்குன்றிச் சத்துராதிகளுக்கு எதிர்த்து நிற்கத் திராணியற்றிருக்கிறார்களே!" என்று ஏக்கம் பிடித்திருக்கும் இராட்சியங்கள் எத்தனை? இலட்சக்கணக்கானவர்கள் குடித்து வெறித்து,வியாதிக்குட்பட்டு, வருஷா வருஷம் மண்ணறைக்குள் பிரவேசிப்பதைக் கண்டுங் காணாதவர்கள்போல் மதியிழந்து மதுபானத்துக்கு அடிமைப்படுகிறவர்கள் எத்தனை கோடி? மதுபானத்தினால் விளையுங் கெடுதிகளை நன்றாயறிந்த ஞானி ஒருவர் சொல்லுகிறதாவது:—"ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்

போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப்போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள், எனக்குச் சுரணையில்லை; நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்". திருவள்ளுவரும் "துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்றார். இராட்சியங்களுக்கிருக்கும் திரி சத்துராதிகளாகிய யுத்தம், பெருவாரி நோய், பஞ்சம் என்பவைகளைவிட குடியே அவைகளுக்குக் கொடிய சத்துரு என்பதை நாம் இங்கு விவரித்து முடியாது. ஆதலால் குடும்பங்களுக்குக் குடியால் விளையுந் தீங்குகளில் முக்கியமானவைகளை மாத்திரம் இந்த அதிகாரத்தில் எடுத்துரைப்போம்.

24. வறுமை (Poverty). குடும்பங்களில் வறுமை தலைகாட்டுவதற்குக் குடியே முக்கிய காரணம். சொற்பச் சம்பளம் வாங்குகிறவர்கள் முதலாய் குடிக்கு அடிமைப் பட்டவர்கள் அல்லவென்றால் அவர்கள் வறுமை என்னும் ஓநாயின் வயிற்றுக்கு இரையாவது அரிது. குடிகாரன் குபேரன் மகனானாலும் குடிக்க அவன் ஓடு தூக்குவது அரிதல்ல. குடிக்கிறவன் வீடு விளங்காது என்பது வாஸ்தவம். குடும்பத்தில் புருஷன் ஒருவனே குடிக்கிறவனானாலும் அவன் வீட்டுக்குரிய இலட்சணம் போய்விடும்; அவன் பெண்சாதி காது தொள்ளக்காதும், அவள் அரை கந்தை யுடுத்ததுமாகும்; அவன் பிள்ளைகள் பன்றிக்குட்டிக்கு ஒப்பாவார்கள்.



*Fig.* 6. அலங்கோலக் குடும்பம் (Disorderly Family).

---

பெண்சாதியுங்கூடச் சேர்ந்து குடிப்பாளானல் அவர்கள் வீடு பன்றிக்கிடையே தவிர வேறு அல்ல; அவர்கள் பொருட்களெல்லாம் கள்ளுக்கடை சேர்ந்துபோகும்; அவர்களும் கள்ளுக்கடைக்குத் தத்துப் பிள்ளைகளாகிவிடுவார்கள். அவர்கள் பிள்ளைகளுங் குடிக்கச் சேர்ந்துகொண்டாலோ அதை எதற்கு ஒப்பிடுவதென்று நமக்கே தெரியவில்லை. குடிகாரன் சேவகத்திலிருக்கும்போதே அவனுடைய மனைவி மக்களுடைய நகைகளும், வீட்டிலுள்ள பொருட்களும் புகையாய்ப் புகைந்து கள்ளுக் குடுவைக்குள்ளும், சாராயப் புட்டிக்குள்ளும் பிரவேசிப்பதால் வறுமை மிஞ்சி அவன் மனைவியும் மக்களும் கூழுக்கடித்துக் கொள்வதைக் கண்ணுற்று முடியாது. அவன் குடிவெறியால் வேலையிழந்து சிங்கியடிக்கையில்

அவன் குடும்பத்தின் ஸ்திதியை நம்மால் சொல்லமுடியாது; கண்ணால் பார்த்தால்தான் தெரியும். அவனும் புகைந்து எலும்புக் கூடாகிப்போவான்.



*Fig.* 7. எல்லாம் புகையாய்ப் புகைதல்.
(All Turning into Smoke).

குடியால் தொழிலாளிகள் வேலைக்கு ஒழுங்காய்ப் போகாததினாலும், வேலைக்குப்போனாலும் சரியாய் வேலையைச் செய்யாததினாலும், குடி வெறியருடைய கவலையீனத்தால் நிலத்திலும் நீரிலும் நடக்கும் உயிர்ச்சேதம் பொருள் நஷ்டங்களினாலும், சற்கருமங்களில் விருத்தியடையவேண்டிய பணம் மதுபானங்களில் அடைபட்டுப் போவதினாலும், குடிவெறியால் பல பாவங்களுக்குட்படுகிறவர்களைப் பிடிக்க

போலீஸ்காரரையும், விசாரிக்க நியாயஸ்தலங்களேயும், அவர்களே அடைத்துப் போஷிக்க சிறைச்சாலேகளேயும் ஏற்படுத்துவதினுலும், குடியால் பைத்தியகாரர்களானவர்களேயும், பல வியாதிக்குட்பட்டவர்களேயும் வைத்தாதரிக்க ஆஸ்பத்திரிகளிருப்பதாலும், குடியைத் தடுக்கவென்று சங்கங்கள் ஏற்படுத்தி, புஸ்தகங்கள் அச்சிட்டு, போதகர்கள் நியமிப்பதாலும் தேசத்துக்குண்டாகும் பண நஷ்டத்தை யாரால் அளவிடக்கூடும்? இவைகளால் குடும்பங்களும் யாருக்குந் தெரியாமலே மெதுவாய் வறுமைக்குட் பிரவேசிக்கின்றன.

25. வியாதிகள் (Diseases). குடியால் உற்பத்தியாகும் வியாதிகள் இரண்டல்ல, மூன்றல்ல; அநேகம். குடிக்




*Fig.* 8. வியாதிப் படுக்கை.
(Sick-Bed).

---

கிறவன் பணத்தைக் கொடுத்து வியாதியை வாங்குகிறுன் என்றே சொல்லவேண்டும். குடிவெறியன் மாத்திரம் வியா

திக்குட்படுகிருன் என்று எண்ணவேண்டாம்; மட்டாய்க் குடிக்கிறவனும் ஆரம்பத்திலேயே வியாதிக்கு அஸ்திபாரம் போட்டுவிடுகிருன். மஸ்து எப்படி சரீரத்திலுள்ள யந்திரங்களைச் சீர்கேடடையச்செய்து வியாதிகளைப் பிறப்பிக்கிறதென்று முந்தின அதிகாரத்தில் சொல்லியிருக்கிறோம். இங்கு குடியாலுண்டாகும் முக்கிய வியாதிகளின் பெயர்களை மாத்திரஞ் சொல்வோம். ஈரல் சம்பந்தமான பாண்டுரோகம், பித்தமயக்கம் முதலியவைகளுக்குக் குடியே முக்கியகாரணம்; குடி பெருகுவதற்குத் தக்கதாய் க்ஷயரோகமும் நமது தேசத்தில் விருத்தியடைகிறது; இரைப்பை சம்பந்தமான அஜீரணத்தைக் குடி உண்டுபண்ணுகிறது. குடிகாரர் இலேசாய்க் காய்ச்சல் முதலிய விஷவித்துக்களால் உண்டாகும் வியாதிகளுக்குள் அகப்பட்டுக்கொள்வார்கள். மூளை சம்பந்தமான பைத்தியம் முதலிய வியாதிகளுக்கும், கை கால் நடுக்கத்துக்கும், சொல்லவேண்டுமானல் நமது சரீரம் சுதந்தரவாளியாயிருக்கும் எல்லா நோய்களுக்கும் குடியும் ஒரு காரணமாயிருக்கிறது.

26. மரணம் (Death). குடியானது மரணக் கணக்கை அதிகப்படுத்துகிறது. கொலைபாதகர்களில் மிகுதியானவர்கள் குடிகாரர்கள்; அவர்கள் குடியால் மதிமயங்கி பிறரைக் கொல்வதல்லாமல் தங்கள் உயிரையும் தூக்குமரத்தில் மாய்த்துக்கொள்ளுகிறுர்கள். மேலும் தற்கொலை செய்துகொள்ளுகிறவர்களில் மிகுதியானவர்கள் குடிகாரர்களே. குடிகாரர் வேண்டுமென்று கொலைசெய்வதல்லாமல் அகஸ்துமாத்தாயுங் கொலைசெய்கிறுர்கள்; குடிவெறியில் தகப்பன் செய்யுங் கோரணிகளினல் பிள்ளைகள் காயப்பட்டு உயிர் துறந்ததுண்டு; தாய் தன் பாலகன்மேல் புரண்டு படுத்துக் கொன்ற

துண்டு; குடிகாரர் தாமே கால் தவறிக் கிணறுகளில் விழுந்து மரித்ததுண்டு. இவ்வித மரணங்களும் குடி அதிக ரிப்பதற்குத் தக்கதாய் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இவைகளைக் கணக்கிட்டுப் பார்க்கிறவர்கள் திடுக்கிட்டுப்போகி ருர்கள். குடிவெறியினுலேயே மரிக்கிறவர்களும் அநேகர். இவைகளையெல்லாம் கண்ணுல் பார்க்கிறவர்கள் பயமடை கிருர்கள். ஆனுல் குடிகாரர்களுக்கு ஆயுசு குறைவு என் பதை அறிந்துணர்ந்தவர்கள் மிகச் சிலரே. இதைத் தீர்க்க மாய்ப் பரீட்சித்தறிந்தவர்கள் மதுபானம் மகா கொடியதென இதைக்கொண்டே தீர்க்கிருர்கள். குடிக்கிறவனுடைய ஆயுசு நாலில் ஒரு பங்கு குறைந்துபோகிறது; அதாவது 30-வய தில் மரித்துப்போகிற குடிகாரன் குடியாதவனுய் இருந்திருப் பானுனுல் 40-வயது வரையில் உயிரோடிருப்பான். 60-வய தில் மரித்துப்போகிறவன் 80-வயது வரை உயிரோடிருப் பான். குடிகாரர் தொகையும் குடியாதவர்கள் தொகையுஞ் சமமாயிருக்குமானுல் சாகிற 7-பேரில் 4-பேர் குடிகாரர், 3-பேர் குடியாதவர்கள்; அதாவது குடியாதவர்கள் தொ கையைவிடக் குடித்தவர்கள் தொகை மூன்றில் ஒரு பங்கு அதிகமாயிருக்கும். குடியாதவர்கள் தொகையைவிட குடிக் கிறவர்கள் தொகை அதிகப்பட்டாலோ மரணக் கணக்கில் குடிக்கிறவர்கள் தொகை எவ்வளவுக்கு அதிகப்படும்! இது காரணத்தையிட்டே உயிர்க்குத்தரவாத (Life Insurance) நிதிகள் குடிகாரரைச் சேர்க்கிறதில்லை; சேர்த்தாலும் குடி யாதவர்களிடமிருந்து வாங்குகிறதைவிட இவர்களிடமிருந்து அதிகக் கட்டணம் வாங்குகின்றன.

27. பாவம் (Sin). முன் சொன்னதுபோல் மஸ்து மனுஷனிடத்திலுள்ள இழி குணங்களை எழுப்பிவிடுந் தன்

மையுடையதாகையால் குடிகாரர் சாதாரணமாய்ப் பாபக் கிரியைகளைச் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். குடிகாரன் வீட்டிலே ஓயாச்சண்டை; அவன் மனைவி மக்கள் அவனைக் கண்டால் புலியைக் கண்டு பதுங்குவதுபோல் பதுங்குவார்கள். அயல்வீட்டுக்காரர் அவனுக்கு அஞ்சுவார்கள். மனைவி குடிக்கிறவளானால் புருஷனை எதிர்த்து மல்லுக்கட்டப் பின் வாங்காள்; பக்கத்து வீட்டுக்காரரோடு சண்டையிடும்போது குட்டியைப் பறிகொடுத்த தாய்ப்புலியைப்போல் பாய்வாள். குடிகாரப் பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதில்லை; மற்றப் பெரியோரைக் கனம்பண்ணார்கள். குடிகாரனிடத்தில் நீதி, நியாயம் என்பவை கிடையா; காருணியம், அன்பு என்னுஞ் சிறந்த இலட்சணங்களும் இல்லை. சில சமயங்களில் அவர்கள் இந்தத் தேவலட்சணங்கள் பொருந்தியவர்கள் போல் காணப்பட்டாலும் இவைகளெல்லாம் க்ஷணத்தில் ஒழிந்துபோம். இவர்களிடத்தில் கற்பு என்பது மருந்துக்குங் கிடையாது. இவர்கள் வாய் திறக்கப்பட்ட பிரேதக் குழி; அசுத்த வார்த்தைகள் அடுக்கடுக்காய் வரும்; பொய் பேசவும், கொடுத்த வாக்குத்தத்தங்களை மாற்றவும் அஞ்சார்கள்; களவுசெய்து சிறைச்சாலைக்குப் போக வெட்கப்படார்கள்; பழிக்கஞ்சாமல் கொலைகளில் தலையிட்டுத் தூக்குமரத்துக்கும் போவார்கள். குடியினால் விளையும் பாவங்கள் அநந்தம்; அவைகளின் அகோரத்தை விவரித்து முடியாது.

28. சந்ததி அற்றுப்போதல் (Extinction of Posterity). குடிகாரர் சந்ததிக்கு விருத்தி கிடையாது. குடிகாரருக்குள் சநிப்பிக்குஞ் சக்தி படிப்படியாய்க் குறைந்துபோவதால் அவர்கள் அநேக பிள்ளைகள் பெறுதொழிவதல்லாமல் பிள்ளையே இல்லாமலும் மரிப்பதுண்டு. பெற்ற பிள்ளைகளும்

இயல்பாய்க் குடிகாரர்களாகி, பல பாவ தோஷங்களுக்குட் பட்டு அகால மரணமடைகிறார்கள். பைத்தியம், க்ஷயரோகம் முதலியன எப்படி பரம்பரையான நோய்களோ அப்படியே இவ்வியாதிகளுக்கு ஓர் காரணமான குடியும் பரம்பரையான தீங்காயிருக்கிறது. பெற்றோருடைய அக்கிரமமாகிய குடி பிள்ளைகளிடத்தில் மூன்றும் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கப்படுவதால் குடிக்குப் பேர்போன குடும்பங்கள் மூன்று நாலு தலைமுறைகளில் அற்றுப்போகின்றன. சன் மார்க்க நெறி தவறாது நடந்து, உலகப் பிரசித்திபெற்று வாழ்ந்த குடும்பங்கள் முதலாய் குடியில் சிக்குண்டு மூன்று நாலு தலைமுறைகளுக்குள் கெட்டலைந்து, அவைகளின் பெயர் களும் மறக்கப்பட்டுப் போகிறதென்றால் குடியிலகப்பட்ட மற்றக் குடும்பங்களுக்குக் கேட்பானேன்! இது காரணத்தை யிட்டே குடி கூளி (Demon Drink) என்றழைக்கப் படுகிறது.

## VI. அதிகாரம்.

### குடிவிருத்தி (The Spread of Drink).

29. பூமியில் குடிவிருத்தி (The Spread of Drink in the World). வைதீக புஸ்தகங்களை வாசித்துப் பார்த்




*Fig.* 9. பூமி (The World).

தாலும், லௌகீகப் புஸ்தகங்களை வாசித்துப் பார்த்தாலும் குடி ஆதிகாலந்தொடுத்தே மனுஷ ஜாதிகளை உபத்திரவப் படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை இலேசாய்க் கண்டு கொள்ளலாம். பத்தனாகிய நோவா குடிவெறியால் மெய் மறந்து நிர்வாணமாய்க் கிடந்ததையும், லோத்து என்பவன் குடிவெறியால் தன் குமாரத்திகளின் கண்ணிக்குள் அகப் பட்டதையும், குடியால் விளையுந் தீங்குகளைப்பற்றியும் சத்திய

வேத புஸ்தகம் மூலமாய் அறிந்துகொள்ளலாம். 1860-ஆம் வருஷக் குடிமதிப்புக் கணக்குப் பிரகாரம் அமெரிக்காவின் ஐக்கிய மாகாணத்திலே முந்தின பத்து வருஷங்களில் குடியால் 2 லட்சம் ஸ்திரீகள் விதவைகளும் 10 லட்சம் பிள்ளைகள் அனுதிகளுமானுர்கள் என்றும், 2 ஆயிரம்பேர் தற்கொலை செய்துகொண்டார்களென்றும், ஆயிரம்பேர் பைத்தியகாரர்கள் ஆனுர்களென்றும், 1½ லட்சம்பேர் சிறைச்சாலைகளுக்குப் போக நேரிட்டதென்றும், 3 லட்சம்பேர் உயிர்துறந்தார்களென்றும் அறியலாம். குடியினுல் அங்கு விளைந்த பண நஷ்டமும் கொஞ்சமல்ல. தற்காலத்தில் அங்குண்டாகியிருக்கும் மதுவிலக்குச் சங்கங்களின் தொகையைக் கவனித்தாலும் குடிவெறியின் அகோரம் அங்கு எவ்வளவு என்பதை ஒருவாறு கண்டுகொள்ளலாம். முற்காலந்தொடுத்தே ஐரோப்பாவிலும் குடி குடிகொண்டிருந்திருக்கிறது. தற்காலத்தில் குடியே அதன் பெரிய சத்துராதி. ருஷியா மகா பெரிய இராட்சியமாயினும் அதன் பலம் குறைந்ததற்குக் குடிவெறியே காரணம். உலகத்தில் நடந்த யுத்தங்களிலெல்லாம் பெரிய யுத்தமாகிய தற்கால யுத்தம் ஆரம்பித்த பின்தான் ருஷியாவுக்குத் தன் பலவீனத்தின் காரணம் தெரிந்தது. இப்போது விலக்கப்பட்டிருக்கும் வோட்கா (Vodka) என்னும் ஒரு மதுபானத்தால் முன் ருஷியாவுக்குக் கிடைத்த அரசிறை ஒரு கோடி பவுனுல் குடிவிருத்தி அங்கு எவ்வளவு என்பதை ஒருவாறு கிரகித்துக்கொள்ளலாம். ருஷிய சக்கரவர்த்தி இந்த மதுபானத்தை விலக்கிய முதல் வருஷத்திலேயே ஜனங்கள் தபாலாபீசுகளில் போட்டு வைத்திருந்த பணத்தின் தொகை 14 மடங்கு அதிகரித்து விட்டது.

30. இங்கிலாந்தில் குடிவிருத்தி (The Spread of Drink in England). இங்கிலாந்து உலகத்திலுள்ள ஆஸ்தியுடைய தேசங்களில் ஒன்ருயினும் மகா கொடிய தரித்திரத்தால் வாதிக்கப் படுவோர் அங்கு குடியிருப்பதற்குக் குடிவெறியே காரணம். தற்காலத்தில் இங்கிலாந்துக் கிருக்குஞ் சத்துராதிகளிலெல்லாம் ஜெர்மனியே பெரிய சத்துருவென உலகமெங்கும் பேசிக்கொள்ளப்பட்டாலும் வாஸ்தவத்தில் குடிவெறி ஜெர்மனியைப் பார்க்கிலும் கொடிய சத்துராதி. தற்கால மகா யுத்தத்தில் இதுவரை மடிந்தோர் தொகையைக் காட்டிலும் இதுவரை குடியால் மடிந்தோர் தொகையே பெரிது. வருஷா வருஷம் ஆயிரக்கணக்கானவர்கள் குளிரினல் அங்கு மடிவதற்கும் குடியே மூலகாரணம். யுத்தத்தால் அநேக குடும்பங்கள் அங்கே பாழாய்ப்போயினவாயினும் குடியினல் பாழான குடும்பங்களின் தொகையே அதிகம். இங்கிலாந்தின் குடிவெறியின் விருத்தியையும், அதனல் விளைந்த தீமைகளையுங் கண்டறிந்த காலஞ்சென்ற கிச்சினர் பிரபு (Lord Kitchener) ஜெர்மனியோடு போர்புரிய பிரிட்டிஷ் சைனியங்களை பிரான்சு தேசத்துக்கு அனுப்புகையில் "மதுபானங்களைத் தொடாதிருங்கள்" என்னுங் கட்டளையை அவைகளுக்குக் கொடுத்தார். அவருக்குப் பின் அவருடைய ஸ்தானத்திற்கு வந்திருக்கும் கனம். லாயிட் ஜார்ஜ் (Mr. Lloyd George) என்பவர் "இங்கிலாந்துக்கு இன்று ஜெர்



*Fig.* 10. இங்கிலாந்து. (England).

மனி, குடி என்னும் இரண்டு சத்துராதிகளுண்டு; இவைகளில் குடியே கொடியது" என்றார். பெரிய பிரித்தானியாவிலே 1915-ஆம் வருஷம் குடித்த மதுபானங்களின் விலை 18 கோடி பவுன். இது 1914-ஆம் வருஷம் குடித்ததினும் ஒரு கோடியே ஏழு லட்சம் பவுன் அதிகம்.

31. இந்தியாவில் குடிவிருத்தி (The Spread of Drink in India). இந்துக்களுடைய வேத புத்தகங்கள் மதுபானங்கள் தேவர்களுங் கொண்டாடும் பானங்கள் என்று புகழ்ந்து பேசுவதைக் கவனித்தால் ஆதிகாலத்தில் குடி இந்தியாவில் எவ்வளவாய் விசேஷித்துக் கொண்டாடப் பட்டதென்பதை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். பிரையேறிய மதுபானங்கள் முற்காலத்தில் இந்தியாவில் சாதாரணமாய் வழங்கி வந்தன. அவைகளில் முக்கியமானது சோமரசம். காய்ச்சி வடித்த மதுபானங்களும் அந்தக் காலத்தில் சாதாரணமாய் உபயோகிக்கப்பட்டன. குடிவெறியினால் விளைந்த தீங்குகள் அதிகப்பட்டபடியால் புத்தனும் பின் வந்த பிராமணர்களும் அதைத் தடுக்கத் தங்களால் இயன்ற முயற்சி யெடுத்தார்கள். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய துவிஜர் மதுபானம் அருந்தலாகாதென மனு தரும சாஸ்திரத்தால் விலக்கப்பட்டிருக்கிறார்கள்; ஆனால் சூத்திரர் அப்படி விலக்கப்படவில்லை. கள் முதலியவைகளைக் காய்ச்சி வடித்திறக்குஞ் சாராயத் தொழில் இந்தியாவில் உற்பத்தியாகி, அரபியர்



*Fig.* 11. இந்தியா. (India).

மூலம் மேற்குத் தேசத்திற்குப் போய், அங்கு விருத்தியாகி, இப்போது அங்கிருந்து பலநிறச் சாராயங்கள் இங்கு வந்து குடும்பங்களைப் பாழாக்குகின்றன. குடி எப்படி மேற்குத் தேசங்களுக்கிருக்குஞ் சத்துராதிகளிலெல்லாங் கொடிய சத்துராதியாயிருக்கிறதோ, அப்படியே அது இந்தியாவிலும் சத்துராதிகளில் கொடிய சத்துராதியாயிருக்கத் தலைப்பட்டிருக்கிறது.

1906-ஆம் வருஷம் இந்தியாவில் 32,367 நாட்டுச் சாராயக்கடைகளிருந்தன. இராசாங்கத்தார் கடைகளின் தொகையைக் குறைத்துக்கொண்டே வந்தபடியால் 1914-ஆம் வருஷத்தில் 24,588 கடைகள் மாத்திரம் இருந்தன; ஆனால் குடிக்கப்பட்ட சாராயத்தின் அளவோ வருஷா வருஷம் ஏறிக்கொண்டே வந்திருக்கிறதே தவிரக் குறையவில்லை. 1906-ஆம் வருஷக் கடைசியில் இந்தியாவில் 41,335 கள்ளுக் கடைகள் இருந்தன; அவைகளால் இராசாங்கத்தாருக்கு அந்த வருஷங் கிடைத்த வரி 133 லட்சம் ரூபாய். 1914-ஆம் வருஷம் கள்ளுக்கடைகளின் தொகை 30,185-ஆகச் சுருங்கிப்போனாலும் கிடைத்த வரி 201·83 லட்சம் ரூபாய்க்கு ஏறிவிட்டது.

32. சென்னை இராஜதானியில் குடிவிருத்தி (The Spread of Drink in the Madras Presidency). 1906-ஆம் வருஷம் சென்னை இராஜதானியில் 11,524 சாராயக் கடைகள் இருந்தன; 1914-ஆம் வருஷத்தில் 8,976-ஆக கடைளின் தொகை சுருங்கிப் போனாலும் குடித்த சாராயத்தின் அளவோ 1,221,819 காலனிலிருந்து 1,782,032 காலனுக்கு ஏறிவிட்டது. 1906-ஆம் வருஷத்தில் 19,030 கள்ளுக்

கடைகளிருந்தன ; அப்போது கிடைத்த வரி 96 லட்சம் ரூபாய். 1914-ஆம் வருஷம்கள்ளுக் கடைகளின் தொகை 14,478 ஆகச் சுருங்கிப்போனாலும் கிடைத்த வரி 152 லட்சம் ரூபாய்க்கு ஏறிவிட்டது. குடித்த கள் 12 கோடி காலனுக்கு எட்டிவிட்டது. இந்தியாவில் நாட்டுச் சாராயம் அதிகப்பட்டுக் கொண்டு வருகையில் அன்னிய தேசச் சாராயம் குறைந்துகொண்டு வருகிறது. ஆனால் சென்னை இராஜதானியில் அன்னியதேசச் சாராயமும் அதிகப்பட்டிருக்கிறது. 1912-ஆம் வருஷம் 9,348 பேர் குடிவெறியினிமித்தம் தண்டிக்கப்பட்டார்கள். 1914-ஆம் வருஷம் குடிவெறிக்காகத் தண்டிக்கப்பட்டவர்களின் தொகை 12,157. சென்னை இராஜதானியில் மாத்திரம் வருஷா வருஷம் மூன்றரைக்கோடி ரூபாய்க்குமேல் குடிவகைகளில் செலவழிக்கப் படுகிறது. இவைகளைக் கவனிக்கும்போது சென்னை இராஜதானியில் குடி வருஷா வருஷம் அதிகரித்துக் கொண்டே வருகிறதென்றும், இந்தியாவின் மற்ற இராஜதானிகளைவிட இதுவே குடிக்குப் பெயர்போன இராஜதானியென்றுங் கண்டுகொள்ளலாம்.



*Fig.* 12.
சென்னை இராஜதானி.
(The Madras Presidency).

33. சென்னபட்டணத்தில் குடிவிருத்தி (The Spread of Drink in the City of Madras). சென்னை இராஜதானியில் சென்னபட்டணமே குடிக்குப் பேர்போன பட்டணம். முன்னே குடிக்காத முகமதியருங் குடிக்கத்



*Fig.* 13. சென்னபட்டணம் (Madras).

தலைப்பட்டிருக்கிறார்கள். குடிவிஷயத்தில் பஞ்சமர், பிராமணர் என்கிற வித்தியாசமும், இந்துக்கள், முகமதியர், கிறிஸ்தவர் என்கிற மதபேதமுங் காணோம். சாயந்தர நேரங்களில் சென்னபட்டணத்துக் கள்ளுக்கடைகளைப் போய்ப் பார்த்தால் அங்கு சட்குடிக்கிறவர்கள் புருஷர் மாத்திரமல்ல, ஸ்திரீகளும், பிள்ளைகளுங்கூட என்று கண்டு கொள்வோம். சென்னபட்டணம் கவர்னர் வசிக்கும் நகரமாயினும், இங்கு நியாயஸ்தலங்களும் போலீஸ் ஸ்டேஷன்களும் அநேகம் உண்டாயினும், குடிவெறியால் விளையுஞ் சண்டைகளுக்கும் கொலைபாதகங்களுக்குங் குறைவில்லை. சென்னைமாநகரில் குடிவெறியினிமித்தம் தண்டிக்கப்பட்டவர்களின் தொகை 1912-ஆம் வருஷத்தில் 3,564; 1914-ஆம் வருஷத்தில் 3,767.

1915-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் சென்னை கிறிஸ்தவ வாலிப சங்கத்தார் சென்னையிலுள்ள 82 கள்ளுக்

கடைகளையும் 28 சாராயக்கடைகளையும் ஒருவாரமாகக் கவனித்து 62,000 பேர் தினந்தினம் சாயந்தரம் நாலுமணிக்கும் ஒன்பது மணிக்கும் இடையில் மதுபானக்கடைகளில் பிரவேசித்து 44,500 பேர் கள்ளும், 17,500 பேர் சாராயமும் குடிக்கிறார்கள் என்று கணித்தார்கள். இதுவே சென்னபட்டணத்து ஜனத்தொகையில் கொஞ்சங் குறைய எட்டில் ஒரு பங்காகிறது. இக்கணக்கில் அடங்காத வீட்டிலிருந்து குடிக்கிறவர்கள் தொகையையும், காலைமுதல் சாயந்தரம் நாலு மணிவரை மதுபானக்கடைகளில் மதுபானம் அருந்துகிறவர்கள் தொகையையுஞ் சேர்த்தால் குடிக்கிறவர்கள்தொகை ஒரு லட்சம் ஆகிவிடும் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

சென்னபட்டணத்தைச் சேர்ந்த இராயபுரத்திலுள்ள கள்ளுக்கடைகளில் ஒன்று 1915-ஆம் வருஷம் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாயாகக் குத்தகைக்கு விடப்பட்டது; அதே கடை 1916-ஆம் வருஷம் மாதத்துக்கு 800 ரூபாயாக விடப்பட்டிருக்கிறது. அங்கிருந்த பட்டைச் சாராயக் கடைகள் இரண்டும் 1915-ஆம் வருஷம் மாதம் ஒன்றுக்கு 930 ரூபாயாகக் குத்தகைக்கு விடப்பட்டன; அக்கடைகளில் ஒன்று எடுபட்டுப்போக மற்றது மாத்திரம் 1916-ஆம் வருஷம் மாதம் ஒன்றுக்கு 1500 ரூபாயாகக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. பட்டைச் சாராயம் மற்றச் சாராயங்களை விட விலை சரசம்; ஆனால் அது போதை அதிகந் தரும். இவைகளைக்கொண்டே குடிவிருத்தியை ஒருவாறு கணிக்கலாம்.

---

# VII. அதிகாரம்.

## முழுவிலக்கு (Total Abstinence).

34. மட்டு (Moderation). "அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சு" என்றபடி மட்டுக்கு மிஞ்சிய எல்லாந் தீமையாகவே முடியும். சாப்பாட்டு விஷயத்திலாயினும், உடை விஷயத்திலாயினும், ஒழுக்க விஷயத்திலாயினும் மட்டுக்கு மிஞ்சலாகாது. மட்டுக்குக் குறைவதும் நல்லதல்ல; ஆனல் மட்டுக்கு மிஞ்சுவதிலும் மட்டுக்குக் குறைவது மேல். சிறு பிள்ளைகள் சாதாரணமாய் வாய்க்கு இதமான போஜனங் கிடைக்கும்போது மட்டுக்கு மிஞ்சச் சாப்பிட்டு, வாந்தி, பேதி, வயிற்றுநோவு முதலிய வியாதிகளில் சிக்கி, உள்ள சுகத்தையும் பலத்தையும் சதையையும் இழந்துபோகிறார்கள். போஜனப்பிரியன் ஒருவன் விருந்துக்குப்போய், வயிறு நிறைய, விலாப்புடைக்க, தொண்டைமட்டுஞ் சாப்பிட்டு மூச்சுவிடக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் பக்கத்திலிருந்தவன் "உன் விரல்களில் இரண்டைத் தொண்டைக்குள் செலுத்தி வாந்தியெடுத்துவிடு" என்று சொல்ல, போஜனப்பிரியன், "இரண்டு விரல்களைத் தொண்டைக்குள் செலுத்த இடமிருந்தால் என் கையிலிருக்கும் இந்த இரண்டு வாழைப் பழங்களையும் என் தொண்டைக்குள் செலுத்திவிடுவேனே" என்றானும். இப்படி மிதம் மிஞ்சிச் சாப்பிடுகிறவர்கள் மெலிந்து துரும்புபோல் ஆவது ஆச்சரியமல்ல. இவர்கள் பருத்துக் கொழுத்துப்போனலும் சுகத்திலும் பலத்திலும் மட்டாய்ச் சாப்பிடுகிறவர்களுக்குத் தாழ்ந்தே இருப்பார்கள். ஆகையால் இன்னும் ஒரு பிடி சாதத்துக்கு வயிற்றில் இட

மிருந்து சாப்பிட மனமிருக்கும்போதே போஜனத்தை விட்டெழுந்திருக்கப் பிள்ளைகளைப் பயிற்றவேண்டும்.

உடை விஷயத்தில் மட்டுக்கு மிஞ்சி டம்பாச்சாரிகளாய்க் காணப்படுவது நல்லதல்ல. சுகம், வசதி, நாகரீகம் முதலியனவற்றை அநுசரித்து உடுத்துவதே தகுதி. உடுத்துவதிலும் மட்டுக்குக் குறைவது அவ்வளவு நல்லதல்ல.

தூக்கம், சரீராப்பியாசம் முதலியவற்றிற்கும் ஓர் மட்டுண்டு. பிள்ளைகள் குறித்த நேரத்தில் படுக்கைக்குப் போய், குறித்த நேரத்தில் படுக்கையை விட்டெழுந்திருக்கவும், விளையாடுவதிலுங்கூட மட்டுக்கு மிஞ்சாதிருக்கவும் பழக்குவிக்கப்படவேண்டும்.

பேச்சுக்கும் ஓர் மட்டு உண்டு. கண்டதையெல்லாம் கண்டவிடத்திலெல்லாம் பேசுவது ஒழுக்கம் ஆகாது. பேசவேண்டிய நேரத்தில் பேசவும், பேசவேண்டிய அளவு பேசவும் இளம்பிராயத்திலேயே கற்றுக்கொள்ளவேண்டும். பேசவேண்டியபோது வாயை மூடிக்கொண்டிருப்பதுந் தகுதியல்ல. பணத்தைச் செலவிடுவதிலும் ஓர் மட்டு உண்டு; கையிலுள்ளதையெல்லாம் வாரியிறைத்து ஆராதூரியாய் விளங்குவதுஞ் சரியல்ல; அல்லது காற்காசையுஞ் செலவிடா உலோபியாயிருப்பதுந் தகுதியல்ல. மிஞ்சிய ஞானம் பைத்தியமாகும்; மிஞ்சியதானம் மூடத்தனமாகும். நடுநிலையே சரி நிலை; நடுமார்க்கமே சன்மார்க்கம்.

பானவிஷயத்தில் மட்டாய்க் குடிக்கும் காப்பி, தேயிலை முதலியன நன்மை பயக்குமாயினும் மட்டுக்கு மிஞ்சுங்கால் பெருந் தீங்கை விளைவிக்கும். ஆதலால் பானவிஷயங்களிலும் மட்டை அநுசரித்து நடப்பது அத்தியந்த அவசியம்.

ஆனால் மதுபானத்தைப்பற்றிப் பேசுகையில் 'மட்டு' என்கிற வார்த்தை வரலாகாது. விஷபானத்துக்கு ஒரு அளவு குறித்துச் சாப்பிடலாகுமோ? பொய்க்கு ஒரு அளவு குறித்துப் பேசலாகுமோ? களவு, அயோக்கியம் முதலியவைகளுக்கு ஓர் அளவு குறித்து நடப்பிக்கலாகுமோ? அவ்வாறே மதுபானத்துக்கு ஒரு அளவு குறித்துச் சாப்பிடலாகாது. மதுபானத்தை மிதமாய்ச் சாப்பிட்டாலும் அது செய்யுந் தீங்கைச் செய்தே தீர்க்கும். எல்லாப் போகங்களுக்கும் மட்டு உண்டு, மட்டு அவசியம்; ஆனால் மதுபானம் அருந்துதல் ஆகிய போகத்துக்கு மட்டு என்பதே கிடையாது; அது கட்டோடொழிக்கப்பட வேண்டியது. மேலும், மதுபானத்துக்கு ஒரு அளவு குறித்துச் சாப்பிட்டாலும், அது அந்த அளவைக் கடந்து குடிக்கச் செய்யுந் தன்மையுள்ளது. பேர்பெற்ற ஜான்ஸன் பண்டிதர் (Dr. Samuel Johnson) தாம் மதுபானம் அருந்தாததற்கு இதையே ஒரு காரணமாகச் சொன்னார்.

35. விலக்கு (Abstinence). நிலத்தில் நடமாடும் மிருகங்களும், ஆகாயத்தில் பறக்கும் பட்சி ஜாதிகளும், நீர் வாழ் ஜெந்துக்களும் மதுபானங்கள் குடியாமலே வாழ்ந்து வருகின்றன. உலகத்திலுள்ள மனுஷர்களில் எத்தனையோ கோடி மதுபானம் அருந்தாமலே பிழைத்துவருகிறார்கள். நம்முடைய சக்கரவர்த்தியுடைய சேனைகளில் மதுபானம் அருந்தாத முகம்மதிய போர்வீரர்கள் தைரியத்திலும், பலத்திலும், வருத்தங்களைச் சகிப்பதிலும் சிறந்து விளங்குகிறார்கள். மதுபானிகள் சிறைச்சாலையிலடைக்கப்பட்டிருக்கையில் குடியாதிருந்து ஜீவித்து வருகிறார்கள். இவைகளைக் கவனிக்கையில் மதுபானம் மனுஷனுக்கு அவசியமானதல்ல

என்று பார்க்கிறோம். மதுபானம் தாகத்தை அடக்காதாகையால் அது பானமல்லவென்றும், அது தேகத்தை வளர்த்து அனலை உண்டுபண்ணுதாகையால் அது போஜனமல்லவென்றும் முன் சொன்னோம். அது தேகத்தை எரித்து, புத்தியை மயக்கி, பல தீமைகளைச் செய்ய ஏவும் தீப்பானம் என்றும் முன்னே சொன்னோம். அது மனுஷரின் ஆயுசைக் குறைப்பதல்லாமல் திடீரென அவர்களுக்கு மரணத்தை வருவிக்கிறதென்றும் விளக்கிக் காட்டினோம். மதுபானத்திலுள்ள மஸ்து கொஞ்சம் நீரில் விட்டு சில வகைச் செடிகளின் முளைகளில் வார்த்தால் அவைகள் சீக்கிரம் பட்டுப்போகின்றன. சிலவகை மீன்கள் விடப்பட்டிருக்கும் ஜலத்தில் வார்த்தாலும் அம்மீன்கள் கொல்லப்பட்டுப்போகின்றன. இப்படிப்பட்ட கொடிய விஷமுள்ள பானமாகிய மதுபானத்தை முற்றாய் விலக்குவது அத்தியந்த அவசியமெனச் சொல்லத் தேவையில்லை.

36. குடிக்குப் பரிகாரம் (The Remedy for Drink). மதுபானத்தை விலக்கவேண்டுமென்பது குடியரும் ஒத்துக்கொள்ளவேண்டிய சத்தியம். குடிகாரரில் அநேகர் குடியை விட ஆசைகொண்டாலும் அப்படிச் செய்யச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். "பழக்கங் கொடியது, பாறையிலுங் கோழி கிளறும்" என்றபடி குடியன் தன் கெட்ட பழக்கத்துக்கு அடிமையாகிப் போனபடியால் தன்னைத்தானே விடுவித்துக்கொள்ளச் சக்தியற்றவனா யிருக்கிறான். அவனை விடுவிக்க மனுஷர்படும் பிரயாசத்துக்கு ஒரு அளவில்லை. குடியை அடியோடே தொலைக்கவென்று அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், நமது நாட்டிலுங்கூட ஏற்படுத்தப்பட்டிருக்கும் மதுவிலக்குச் சங்கங்கள் அநேகம். அச்சடிக்கப்பட்ட பத்

திரிகைகளும் புஸ்தகங்களும் பலவுண்டு. நமது இராஜாங்கத்தாரும் வருஷா வருஷம் மதுபானக் கடைகளின் தொகையைக் குறைத்துக்கொண்டே வருகிறார்கள். என்றாலும் மதுபானக்குடி குறைகிறதற்குப் பதிலாக வருஷத்துக்கு வருஷம் அது அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது.

மதுபானக் குடியால் குடியனுக்கு உண்டாகும் கெடுதிகளை நிவிர்த்திசெய்வதற்கு மாற்று மருந்துகள் இருக்கிறாப்போல் தெரியவில்லை. குடிகாரன் அவைகளை உத்தரித்தே தீர்க்கவேண்டும். ஆயினுங் குடியனுக்குக் குடியின்மேலிருக்கும் வாஞ்சையைப் போக்கும் மருந்து கண்டு பிடிக்கப் பலர் பலவிதமாய்ப் பிரயாசப்படுகிறார்கள். வெந்நீரை வழக்கமாய்க் குடித்துவந்தால் மதுபான ஆசை நீங்கிப்போகும் என்று சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர், கள்ளுக் கடைகளுக்குஞ் சாராயக் கடைகளுக்கும் எதிரில் அலங்காரமான கடைகள் கட்டி, அங்கு காப்பி, தேயிலை முதலிய பானங்களும், வாய்க்கு இதமான சிற்றுண்டிகளும், அறுசுவை போஜனங்களும் சித்தப்படுத்தி, கின்னரவாத்தியக் கோஷ்டங்களும், ஆடல் பாடல்களும் நடந்தேறுமானல் மதுபானக்கடைக்குள் பிரவேசிக்கிறவர்கள் இந்தக் கடைகளுக்குள் பிரவேசிக்க ஏவப்பட்டு, நெருப்புப் பானமாகிய மதுபானக் குடியை விட்டு, காப்பி, தேயிலை முதலிய சுடு பானங்களையும், கோலா, சோடா முதலிய குளிர்ந்த பானங்களையுங் குடிக்கப் பழகிக்கொள்வார்கள் என்கிறார்கள். குடியரும் மதுபானமும் இருக்குமட்டும் குடி தொலையப் போகிறதில்லை என்பது நமது அபிப்பிராயம். ஒன்றில் மதுபானங்கள் செய்தலை முற்றாய் ஒழிக்கவேண்டும்; அல்லது குடியர்களை அந்தமான், ஸாந்து ஹெலினு முதலிய தீவுகளுக்கு அனுப்பிவிட வேண்டும்.

ஆனால் இந்த இரண்டு காரியங்களும் இந்த யுகத்தில் நடக்கக் கூடியவைகள் அல்ல.

37. குடி என்னுங் கூளியை ஓட்ட ஒரேவகை (The only method to drive away Demon Drink). சிறுவர்களுக்குப் புதிதாய் ஒன்றைக் கற்றுக்கொடுப்பது இலேசு; அவர்கள் கற்றுக்கொண்டதை மறக்கடிப்பது அரிது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது மெய்யே. சிறுவர்கள் இளம் பிராயத்திலேயே குடிக்கக் கற்றுக்கொள்வார்களானால் அவர்கள் பெரியவர்களானபின் குடியை விடுவது கூடாத காரியம். குடிக்கப் பழகியவர்களைக் குடியை விட்டுவிடும்படி செய்ய மனுஷர் எடுத்துக்கொள்ளும் அரும் பிரயாசங்களெல்லாம் பாதாளத்தில் பாய்ந்தோடும் நதியை மலைமேலேற்றப் பிரயாசப்படுவது போலாகும். ஆனால் சிறுவர்கள் இளம் பிராயத்திலேயே குடியை வெறுக்கக் கற்றுக்கொள்வார்களானால் அவர்கள் பெரியவர்களானபின் குடி என்னுங் கூளிக்கு அடிமைகள் ஆவது அரிது. எல்லாச் சிறுவர்களும் இந்தத் தலைமுறையிலேயே குடியை வெறுக்கக் கற்றுக்கொள்வார்களானால் அடுத்த தலைமுறையில் குடியர்கள் மருந்துக்குங் கிடையார்கள். ஆனால் இது கூடியகாரியமல்ல. ஏனென்றால், இன்று சாயந்தரம் சென்னபட்டணத்துக் கள்ளுக் கடைகளுக்கும் சாராயக் கடைகளுக்கும் போய் நாலுமணிக்கும் ஒன்பதுமணிக்கும் இடையில் அங்கு குடிக்கிறவர்களைக் கவனித்துப் பார்ப்போமானால் அவர்களில் மூவாயிரத்துக்கு மேல் சிறுவர்களென இலேசாய்க் கண்டுகொள்வோம். என்றாலும் குடும்பங்களிலும் பாலர் படிக்கும் பாடசாலைகளிலும், பாலர் வேலைசெய்யுந் தொழிற் றுறைகளிலும் மதுபானத்தை அருந்தாதிருக்கவும், மதுபானத்தை வெறுக்கவும் பாலருக்

குக் கற்றுக்கொடுத்துவந்தால் சிலதலைமுறைகளில் மதுபானத்தால் விளையுந் தீங்குகள் ஒருவாறு ஒழிந்துபோகலாம். இந்தப் பாடத்தைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் பெற்றோரும் உபாத்திமாரும் மற்றோரும் மதுபானம் அருந்தாதவர்களாய் இருக்கவேண்டியது அத்தியந்த அவசியம்.

சிறுவர்களுக்கு மதுபானத்தை வெறுக்கக் கற்றுக்கொடுக்குமுன் தன்னடக்கம் (Self-control) என்ற சிறந்த இலட்சணம் அவர்களில் உதிக்கச் செய்யவேண்டும். பசி அகோரமாயினும் உலையிலிருக்கும் சாதம் பாத்திரத்துக்கு வரும் வரையில் பொறுமையாய்க் காத்திருக்கவும், கையில் காசு இருந்தாலும் துடித்துக்கொண்டு பலகாரம்வாங்க ஓடாதிருக்கவும், விருந்தாளிகள் கொண்டுவந்த சர்க்கரை மிட்டாயைச் சாப்பாட்டுக்குமேல் தாயார் கொடுக்கும்வரை தின்ன ஆசை கொள்ளாதிருக்கவும், மருந்து சாப்பிடுங் காலங்களில் வைத்தியர் விலக்கிய பொருட்களை சாப்பிடாதிருக்கவும் சிறுவர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும். அவர்கள் ஒன்றைவெறுக்கக் கற்றுக்கொள்வார்களானால் மற்றவைகளையும் வெறுக்கக் கற்றுக்கொள்வது இலேசு. அவர்களுக்கு ஒன்றில் தன்னடக்கமற்றிருக்க இளக்காரங் கிடைக்குமானால் அவர்கள் மற்றவைகளிலுந் தன்னடக்கமற்றிருப்பது இலேசு. மேற்கூறிய சிறு காரியங்களில் சிறுவர்கள் தங்களை அடக்கப் பயின்றிருப்பார்களானால் மதுபானம் அருந்தாதபடி அவர்களை அடக்கப் பயிற்றுவிப்பதும் இலேசு.

சிறுவர்கள் எக்காலத்தும் மதுபானம் அருந்தாதிருக்கவேண்டுமாயின் அவர்களுக்கிருக்கும் சுயசித்தம் (Self-will) அழிக்கப்பட்டுப் போகாதிருக்கவும், அது நற்திசையில்

விருத்தியடையவும் பார்க்கவேண்டும். சுயசித்தத்தால் கெட்ட பிள்ளைகள் அநேகர் உண்டாயினும் பிறர் சித்தத்துக் கிணங்கித் தொலைந்துபோன பிள்ளைகள் அநந்தம். நாற்பக்கமும் சுவர்களால் சூழப்பட்டு செழித்து வளர்ந்த மரங்கள் சுவர்கள் நீக்கப்பட்டபின் பெருங் காற்றுக்கு எதிர்த்துநிற்கத் திராணியற்றவைகளாய் வேரோடு சாய்ந்து விழுவதுபோல் சுயசித்தங் குன்றிப் போனவர்களாய்ப் பெற்றோருடைய கட்டு, காவலுக்குள் வளர்ந்துவந்த சிறுவர்கள் சுயாதீனர்களாய் வெளிப்படுங் காலங்களில் பிறர்மேல் சார்ந்து பெரிய பாவங்களுக்கு உட்படுவது ஆச்சரியமல்ல. விவரந் தெரியாதபோது பெற்றோர் சித்தப்படியே நடக்கப் பழக்குவிக்கப்பட்ட பிள்ளைகள் இது சரி, இது தப்பு என்கிற விவரமறிந்தபின் சரியான பாதையில் தாங்களாய் இஷ்டங்கொண்டு நடக்கவும், தப்பான விஷயங்களில் தலையிடாதிருக்கத் தாங்களாய் இஷ்டங் கொள்ளவும் பயிற்றுவிக்கப்படவேண்டும். இப்படிப் பழக்குவிக்கப்பட்ட பிள்ளைகள் "உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்" என்று சொல்வதற்கு இடமிராது. அவரவர் பழி அவரவர் தலைமேலேயே இருக்கும். குடியர்கள் சாதாரணமாய்க் கூட்டுறவைத் தேடுவார்கள்; குடியாதவர்களைக் குடியில் பழக்குவிப்பது அவர்கள் அநுபவிக்கும் இன்பங்களில் ஒன்று. சுயசித்தம் அற்றவர்கள் அவர்கள்கையிலகப்படுவார்களானால் க்ஷணத்தில் குடிக்கக் கற்றுக்கொள்வார்கள். குடிக்கப் பழகினவர்களில் பலர் பிறரைப் பிரியப்படுத்தப் பார்த்தவர்கள். சுயசித்தம் மனுஷருக்குக் கிடைத்திருக்கும் நற்பேறுகளிலொன்று; அதைச் சிரமேற்கொண்டு நன்மைக்கெல்லாம் 'ஆம்' என்று சொல்லவும், தீமைக்கெல்லாம் 'அல்ல' என்று சொல்லவும் பிள்ளைகள் கற்றுக்கொள்

வார்களானல் அதுவே சன்மார்க்க தைரியம் (Moral courage) என்னும் சிறந்த பூஷணமாகும். இந்த அரிய ஆபரணத்தை அணிந்தவர்கள் குடியர் மத்தியில் குடியிருந்தாலும் கறைப் பட்டுப் போகார்கள்.

---

## VIII. அதிகாரம்.

### இராஜரீக முன்மாதிரி (Kingly Example).

38. இராஜாவின் முன்மாதிரி (King's Example). தற் காலத்தில் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், ஆபிரிக்காவி லும் நடந்தேறுகிற மகா பயங்கர யுத்தமானது குடியர்கள் குடியாதவர்களைப்போல் குறிப்புத் தவருது சுடக்கூடியவர்க ளல்லவென்பதையும், தாக்குப் பொறுக்கக் கூடியவர்களல்ல வென்பதையும் ரூபித்துவிட்டது. ஆதலால் சர்வாதிகார ஏகாதிபதியாகிய ருஷிய சக்கரவர்த்தி தமது போர்வீரர் மது பானத்தை அருந்தலாகாதென விதித்துவிட்டார். நமது காருணிய ஜார்ஜ் சக்கரவர்த்தி தமது ராஜ்ஜியங்களுக்கு ருஷிய சக்கரவர்த்தியைப்போல் சர்வாதிகாரியல்ல. ஆயினும் அவர் தமது அரமனைக்குச் சர்வாதிகாரியாதலால் அங்குள்ள வேலைக்காரர் முதலாய் மதுபானத்தை அருந்தலாகாதெனுங் கட்டளை பிறப்பித்து தமது அரமனைக்குள் மதுபானம் பிர வேசியாதபடி செய்துவிட்டார். குடியால் இங்கிலாந்தின் பலம் ஒடுங்குவதையும், தற்கால யுத்தத்தில் ஜெயம் பெறுவ தற்கு முக்கிய ஏதுக்களாகிய குண்டு மருந்து முதலியன செய் வது தடைப்படுவதையுங் கண்டறிந்து, குடியை இங்கிலாந்தி

லிருந்து ஓட்ட வேண்டும் என்கிற நோக்கமாய் நல் முன்மாதிரி காட்டியிருக்கிறார். இவர் செய்திருக்கும் நல்ல ஏற்பாடு இவருடைய அரமனையோடு நின்றுபோகாமல் "கட்டளையி லும் முன்மாதிரியே மேல்" ஆகையால் மற்ற பிரபுக்கள் வீடு



*Fig.* 14. ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தி.
(Emperor George V).

களுக்குஞ் செல்லுகிறது. இந்தியாவிலுள்ள இராஜாக்க ளும் பிரபுக்களும் இவரது நல் முன்மாதிரியைப் பின்பற்று வார்களானல் நலமாயிருக்கும். இவரது செய்கை இவரோடு நின்றுபோகாதென்றும் இவருக்குப் பின்வரும் சக்கரவர்த்தி களும் இவர் தமது தாய்தந்தையரின் அடிச்சுவடுகளில் நடக் குமாறு இவரது அடிச்சுவடுகளில் நடப்பார்களென்றும்

நம்புகிறோம். "திராட்ச ரசங் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதி யல்ல; மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல. மதுபானம் பண்ணினால் அவர்கள் நியாயப் பிரமாணத்தை மறந்து, சிறு மைப் படுகிறவர்களுடைய நியாயத்தையும் புரட்டுவார்கள்."

39. குடும்பத்தலைவனின் முன்மாதிரி (Family Head's Example). நமது இராஜா தமது அரமனைக்குச் சர்வாதி காரியாயிருப்பதுபோல் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் தன் குடும்பத்துக்குச் சர்வாதிகாரியாயிருக்கிறான். அவன் இட்டது சட்டம், அவன் சிரைத்தது மொட்டை. அவன் குடும்பத்தில் அவன் அதிகாரஞ் செல்லவில்லையானால் அது அவனுடைய சொந்தத் தப்பிதமே; ஞானமற்ற விதமாய் நடந்துகொண்டதினாலேயோ, அல்லது குடிவெறி முதலிய அக்கிரமச் செய்கைகளில் சிக்கினதினாலேயோ அவன் வீட் டார் அவனை இராஜ அந்தஸ்திலிருந்து விலக்கியிருக்கவேண் டும். சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனுஷனே தேவனால் அபி ஷேகஞ் செய்யப்பட்ட முதல் சக்கரவர்த்தி; உண்டாக்கப் பட்ட முதல் மனுஷியே முதல் சக்கரவர்த்தினி. அவர்கள் தங்கள் கண்கள் முன்னிருந்த எல்லாவற்றிற்கும் அதிகாரிக ளாயிருந்தார்கள். அவர்கள் தேவ கட்டளையை மீறிய அன்றே இராஜ யோக்கியத்திலிருந்து தள்ளப்பட்டார்கள். நான் என் வீட்டுக்குச் சர்வாதிகார ஏக சக்கரவர்த்தி; நான் என் வீட்டில் மதுபானம் தலைகாட்ட இடங்கொடேன். நீ உன் வீட்டுக்குச் சக்கரவர்த்தியல்லவா ? உன் அதிகாரத்தை மட்டுப்படுத்த யாரால் கூடும்? இன்றே குடி என்னுங் கூளி யை உன் வீட்டிலிருந்து தொலைத்தேபோடு; அப்போது உன் மற்ற சத்துராதிகளுந் தாங்களாய்ச் செலவு பெற்றுக் கொள்வதால் உன் வீட்டில் சமாதானமுஞ் சந்தோஷமும்

நிலைத்தோங்கும். நீ உன் குடும்பத்தார் நிமித்தம் குடியை விடுவாயானால் அது இராஜரிக முன்மாதிரி என்றறி. "திராட்சரசங் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல."

40. தனியாளின் முன்மாதிரி (Individual's Example). தேவன் ஒவ்வொரு ஆளுக்கும் சுவாதீன சுத்தம் (Free-will) தந்திருக்கிறார். அவரவர் தம் இஷ்டப்படி நடக்கப் பார்ப்பார்கள். நாம் ஒருவன் சரீரத்தைக் கட்டிக் காவலில் போட்டாலும் அவனது சித்தத்தை அடக்கியாள நம்மாலியலாது. தேவன் முதலாய் அவன் சித்தத்தை அடக்கியாளாமல் தன் இஷ்டப்படி நன்மைகளை அல்லது தீமைகளைத் தெரிந்துகொண்டு, சந்தோஷத்தை அநுபவிக்க அல்லது கஷ்டத்தைப்பட்டுத்தரிக்க இடங் கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட சுவாதீன சித்தத்தையுடைய ஒவ்வொரு மனுஷனுந் தனக்குத்தானே இராஜா; ஒவ்வொரு மனுஷியுந் தனக்குத்தானே இராஜாத்தி. ஒரு பையன் தனக்குத்தானே இராஜா; ஒரு சிறு பெண் தனக்குத்தானே இராஜாத்தி. இஷ்டமானால் மதுபானத்தை ஆயுள்காலமெல்லாந் தொடாதிருக்கலாம்; இஷ்டமானால் மதுபான வெறிகொண்டு நிர்ப்பந்தர்களாய் ஜீவ ஓட்டத்தை முடிக்கலாம். நான் எனக்கு இராஜா; ஆதலால் நான் மதுபானத்தைக் குடிப்பதில்லை. நீ உனக்கு இராஜாவல்லவா? நீ உனக்கு ராஜாத்தியல்லவா? நீ மதுபானத்தைக் குடிக்கலாமா? நீ நமது இராஜாவைப் போல் பிறருக்கு நல்ல முன்மாதிரி காட்ட வேண்டாமா? நீ பிறர் நிமித்தமாகக் குடியை விட்டுவிடுவாயாகில் அதுவே இராஜரிக முன்மாதிரி. "திராட்சரசங் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல."

## IX. அதிகாரம்.

### வேறு துர்ப்பழக்கங்கள் (Other Evil Habits).

**41. அபினும் கஞ்சாவும் (Opium and Ganja).** அபின், கஞ்சா முதலிய கொடிய விஷ பதார்த்தங்களும் மதுபானங்களைப்போலவே அனுவசியமாய் நமது நாடுகளில் உபயோகிக்கப்படுகின்றன. சீனாவின் சீரழிவுக்குக் காரணம் அபின் சாப்பிடுதல். கங்காநதி தீரத்தில் விளைந்த அபினெல்லாம் சீனா போய்ச் சேர்ந்தது என்று சொல்லலாம். அபினுக்கு அடிமைப்பட்டிருந்த சீனா தேசம் இப்போது அவ்வடிமைத் தனத்துக்கு நீங்கலாகிவருகிறபடியால் அதற்கு நல்ல காலம் பிறந்திருக்கிறதென்று சொல்லலாம். இந்தியா தேசத்திலும் அபின் செய்திருக்குந் தீங்குக்கு ஒரு அளவில்லை. அபின் சாப்பிடுகிறவர்கள் பலவீனர்களும், மந்த புத்தியுள்ளவர்களும், உற்சாகமாய் எதையுஞ் செய்யப் பேச அசக்தர்களுமாகிறார்கள். அவர்களுடைய தோற்றத்தையும் பேச்சையுங்கொண்டு அவர்களை மூடர்களென நினைக்கவேண்டியதாகும். அபின் சாப்பிடும் துர்ப்பழக்கம் ஒரிஸா நாட்டிலிருக்கும் எல்லா வகுப்பாருக்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும், பெரியோருக்கும் சிறியோருக்கும் உரியதெனவும், அபின் அவர்களுக்கு இன்றியமையா வஸ்துவாகிவிட்டதெனவும் அதிகாரிகள் முறையிடுகிறார்கள். மதுபானக் குடிக்குப் பெயர்போன நமது சென்னையிலுங்கூட அபின் சாப்பிடலுக்குக் குறைவில்லை. துரைத்தனத்தார் அபின் சாப்பிடுங் கிடங்குகளைக் கண்டுபிடித்து, கட்டளை மீறியவர்களைத் தண்டித்துவந்தாலும் அபின் சாப்பிடுகிறவர்கள் இருக்கவே

இருக்கிறார்கள். குழந்தைக்கு அபினைக் கொடுத்து மயங்கிக் கிடக்கவிட்டு வேலைக்குப்போகுந் தாய்மாருமுண்டு. குழந்தைகளுக்கு அபின் மரணத்துக் கேதுவானதாயினும் குழந்தை மருந்தென்று சொல்லி அபின் சேர்ந்த போலி மருந்துகளை அவர்களுக்குக் கொடுத்தவரும் அறிவீனப் பெற்றோரும் போலி வைத்தியர்களும் அநேகர் உண்டு.

கஞ்சாவைப் புகைத்துக் குடித்தல் தணிக்கப்படக் கூடா சாபமாயிருக்கிறதென்றும், கஞ்சா சாப்பிடுவது மகா கொடிய பாதகங்களுக்கு ஊற்றாயிருக்கிறதென்றும், மனுஷரை பைத்தியகாரர் ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதில் கஞ்சாவுக்கு நிகரானது வேறொன்றில்லையென்றும் வங்காளத்துப் பக்கத்திலுள்ள அதிகாரியொருவர் சொல்லுகிறார்.

பெற்றோரும் மற்றோரும் அபின் சாப்பிடுதல் கஞ்சாக் குடித்தல் முதலிய துர்ப்பழக்கங்கள் பிள்ளைகளுக்குள் தலைகாட்டாதபடி கருத்தாய்ப் பார்த்து வருவார்களானால் சரீரத்தையும், மனதையும் ஆத்துமாவையுங் கெடுக்கும் இத்தீய பழக்கங்களும் சீக்கிரம் ஒழிந்துபோம்.

42. புகையிலை (Tobacco). அபின், கஞ்சா முதலியனவற்றைப் போலவே புகையிலையுந் தீங்கு விளைவிக்கும் வஸ்துவாயிருக்கிறது. அதை அநேகர் தங்கள் வாய்க்குள் அடக்கிவைத்துக்கொண்டு, கண்டவிடமெல்லாம் புகையிலை எச்சிலைத் துப்பும் துர்வழக்கம் அருவருப்பானது. அவர்கள் தங்கள் வாயைத் திறக்கும்போது துர்நாற்றங் கிளம்பும். புகையிலை யடக்குதல் அஜீரணத்துக்குக் காரணமாகும். இத் துர்வழக்கம் நமது நாட்டில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானதாயிருக்கிறது. புகையிலைப் பொடியை மூக்

குக்குள் ஏற்றும் துர்வழக்கமும் நமது நாட்டுக்கு மிகச் சாதாரணமானது. இது ஆண்களுக்கே உரிய துர்வழக்கமாயினும் பெண்களுங்கூட பொடிப்போடுவதைக் காண்பது அரிதல்ல. பொடிப்போடுகிறவர்கள் மூக்கைச் சிந்தி சளியைக் கண்டவிடமெல்லாம் போடுவதும், வழியிற்போகிறவர்களிடத்திலெல்லாம் "பொடி கொடு" என்று பிச்சைகேட்பதும் அருவருக்கப்படத்தக்கவை. அவர்கள் வைத்திருக்கும் கைக் குட்டைகளை நமது கண்கள் பார்க்கச் சகியா; அவர்களுடைய ஆக்கிராண நரம்புகளின் சக்தி கெட்டு அவர்களுடைய மோப்பப்புலன் குன்றிப்போவதால் வாசனைகளைப் பகுத்தறியக்கூடாதவர்களாகிறார்கள். அவர்களுடைய வாயே சுவாசிக்கும் மூக்காக மாறுவதுமுண்டு.

புகையிலையைப் புகைத்துக் குடிக்கும் வழக்கம் சென்னபட்டணத்திலுள்ள ஆண்களில் கற்றோரையுங் கல்லாதவர்களையும், பெரியோரையுஞ் சிறியோரையும் பீடிக்கும் பெரும் பீடையாக இருக்கிறது. சாலையோரத்தில் உட்கார்ந்திருக்கும் அம்பட்டன் வாயிலொரு சுருட்டைக் கௌவிக்கொண்டு தன்முன் உட்கார்ந்திருக்கிறவர்மேல் புகையை விட்டுக்கொண்டே சவரஞ்செய்கிறான். ஜட்காவண்டிக்காரன் வண்டிக்குள் இருக்கிறவர்கள்மேல் புகைபட புகையை விட்டுக்கொண்டே குதிரையை ஓட்டுகிறான். பள்ளிக்கூடத்தில் படித்துக்கொடுக்கிற உபாத்தியாயர் வாயிலுஞ் சுருட்டு, அவரிடத்தில் கற்கிற மாணாக்கர் வாயிலுஞ் சுருட்டு. திராம் வண்டியில் ஏறினாலோ புகை



*Fig.* 15.
சுருட்டுப்பிடித்தல்.
(Smoking).

நாற்றத்தோடேதான் கீழே இறங்கவேண்டும்; அங்கே உட்கார்ந்திருப்போர் நாகரிகத்தில் தேர்ந்தோர்போல் காணப்பட்டாலும் மரியாதை இன்னதென்று கிஞ்சித்தேனும் அறியாதவர்களாய் தங்கள் வாயிலிருந்து புறப்படும் புகையை அருகிலிருக்கும் அறிமுகமற்ற ஆண்கள்மேலும் பெண்கள்மேலும் விடுவது எவ்வளவு அகோரமானது! அவர்கள் அங்குமிங்குந் துப்புவது அருவருக்கப்படத் தக்கது.

புகைகுடித்தலால் விளையுங் கெடுதிகளைக் கவனித்தால், அது மட்டாயும் மரியாதையாயுங் குடிக்கத் தக்கதன்று; முற்றாய் விலக்கவேண்டியது என்று கண்டுகொள்வோம். மதுபானத்திலுள்ள மஸ்து எப்படி மூளையையும், இரத்தாசயத்தையும், ஜீரணக் கருவிகளையுந் தாக்கி சரீரத்தையும் மனதையுங் கெடுத்துவிடுகிறதோ, அப்படியே புகையிலையிலுள்ள மயக்கந் தரும் வஸ்துவும் செய்கிறது. புகையிலைச் சத்து மூளையைத் திமிர்ப்படுத்துவதால் புத்தி மழுங்கி, உற்சாகங் குன்றி, சரீர மனோ வேலைகள் தளர்ச்சியடைகின்றன; இருதயத்தைத் தாக்குவதால் அது தன் தொழிலைச் சரியாய்ச் செய்யச் சக்தியற்றதாகி இருதயம் படபடவென அடித்தல், நாடி பலவீனமாய் அல்லது ஒழுங்கீனமாய் அடித்தல், இளைப்பு, மயக்கம், இருதயம் பருத்து அல்லது சிறுத்துப் போதல் முதலிய பல தொந்தரவுகள் நேரிடுகின்றன; ஜீரணக் கருவிகள் பழுதடைவதால் பசியின்மை, குமட்டுதல், அஜீரணம், நெஞ்செரிவு, தொண்டைப்புண் முதலிய சங்கடங்களும் உண்டாகும்.

பையன்கள் சுருட்டுக் குடிப்பதால் க்ஷயரோகத்துக்கும் பலவீனத்திற்கும் ஆளாகிறார்கள்; பெரியவர்களாகும்போது

மதுபானங் குடிக்கவும் ஏவப்படுகிறார்கள். ஆதலால் தங்கள் பிள்ளைகளை நேசிக்கும் பெற்றோரும், மாணாக்கரின் நன்மையைக் கருதிய உபாத்திமாரும் போதனையினாலும் சாதனையினாலும் சுருட்டு பையன்கள் வாயில் படாதிருக்கப் பார்க்க வேண்டும். சுருட்டுக் குடியாதவர்களுடைய பிள்ளைகள் முதலாய்ச் சுருட்டுக் குடிக்க ஆரம்பித்திருக்கும் இக்காலத்தில் சுருட்டுப் பிடிக்கிறவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சுருட்டுப் பிடிக்காதிருக்கப் போதிப்பது வீண்.

புகை குடிக்குங் கெட்ட வழக்கம் நமது நாட்டில் ஆண்களுக்கே உரியதாகத் தோன்றுகிறது. ஸ்திரீகள் மனம் வைத்தால் தங்கள் குமாரரையும் சகோதரரையும் புகைக் குடியை அருவருக்கச்செய்வது சுலபம்; மேலும் தங்கள் புருஷரையும் புகைக் குடியை விட்டுவிடச்செய்வது வருத்தமான காரியமல்ல. ஆனால் ஸ்திரீகளும் இரகசியத்தில் சுருட்டுப் பிடிக்கத் தலைப்படுகிறார்கள் என்பது துக்கப்படத்தக்கது.

43. வெற்றிலை (Betel). தாம்பூலம் போடுவது நமது நாட்டிலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழக்கம். இதைத் தேசவழக்கம் என்றே சொல்லவேண்டும். வீட்டுக்கு விருந்தினர் வந்தவிடத்தும், கலியாண காலங்களிலும் வெற்றிலை படும்பாடு பெரும்பாடு. இதையுந் துர்வழக்கமென்று சொல்லத் துணிந்தோம். வெற்றிலை போடவேண்டிய காரணமென்ன? அதனால் உண்டாகும் நன்மையென்ன? வீணுக்கு ஏன் காசைச் செலவழிக்கவேண்டும்? வாயைச் சிவக்கச்செய்வது நாகரீகக் குறைவைக் காட்டவில்லையா? அனாவசியமானதைச் செய்யாதொழிவதே சரி. தமிழ் நாட்டிலே "சும்மா" என்கிற பதம் மிகச் சாதாரண

மாய் உபயோகிக்கப்படுகிறது. அந்தப் பதம் தீமைக்குஞ் சாக்குப் போக்காயிருக்கிறது. ஏன் இங்குவந்தாய்? சும்மா வந்தேன். ஏன் இல்லாததைச் சொன்னுய்? சும்மா சொன்னேன். ஏனப்பா கட்குடித்தாய்? சும்மா வந்ததைச் சும்மா குடித்தேன். பிள்ளைகள் சும்மா என்னும் இந்தப் பதத்தை இந்த அருத்தத்தில் உபயோகிக்கவே படாது. அவர்கள் பேசுவதொவ்வொன்றிற்கும், செய்வதொவ்வொன்றிற்குங் காரணமிருக்கவேண்டும். பள்ளிக்கூடத்துக்குப் போகுங் காலத்தில் வெற்றிலை போடாத பிள்ளை படிப்பை விட்டபின் வெற்றிலை போடவேண்டிய காரணமென்ன? கலியாணஞ் செய்யுமுன் வெற்றிலை போடாத பெண் கலியாணஞ் செய்தபின் வெற்றிலை போடப் பழகி, பழக்கம் முற்ற அதை வழக்கமாக்கிக் கொண்டதேன்? எண்பத்தைந்து வயதுள்ள ஓர் அம்மாள் தாங்கள் சிறு பிராயமுதல் பழகியிருந்த வெற்றிலைபோடும் வழக்கத்தை தங்கள் இளைய குமாரன் சொற் கேட்டு பேரன்மாருக்கு நன்முன்மாதிரி காட்டவென்று க்ஷணத்தில் விட்டுவிட்டார்களென்றால், வெற்றிலைபோடும் பழக்கமில்லாத பிள்ளை வெற்றிலை போடாதிருப்பதும், பழக்கம் முற்றி வழக்கமாகுமுன் ஒரு பிள்ளை வெற்றிலைப் பழக்கத்தை விட்டுவிடுவதும் கஷ்டமா? நமது நாட்டார் தரித்திரத்திலகப்பட்டு விடுவிப்பார் இல்லாது சங்கடப்படுவதற்கு அவர்களுடைய பல துர்ப்பழக்கங்களும் துர்வழக்கங்களுமே காரணம். வெற்றிலைபோடும் வழக்கமும் நமது நாட்டை விட்டு ஓட்டப்படுவதாக.

# X. அதிகாரம்.

## மதுவிலக்குப் பாட்டுகள் (Temperance Songs).



*Fig.* 16. பாடுவோன் (The Warbler).

### 44. ஜலபானத்துக்கும் மதுபானத்துக்குஞ் சண்டை.
### (Water Drink *versus* Alcoholic Drinks).

இராகம், பியாகு. ரூபகதாளம்.

பல்லவி.

தாகமுள்ளோனே, இதோ! தண்ணீர் இருக்கிறது;
தாகந் தீர்த்துக்கொள்ள நீ வா, வா, வா; ஒ

அனுபல்லவி.

தாகந் தீர்க்கத் தண்ணீர்தான் வேண்டும்; தாகம் போக்க வெந்நீரும்
சோகந் தீர்ப்பது தண்ணீர்; தேகம் ஏற்பது நன்னீர்; [போதும்;
பானம்பண்ணிச் சோதித்துப் பார், பார், பார்; ஒ

சரணங்கள்

1. கள்ளுக்கடைக்கு நீ போய், கள்ளுக் குடுவை தூக்கி,
கள்ளேன் நீ குடிக்கிறாய்? சொல், சொல், சொல்;
புளித்து நுரைத்த கள் குலைத்துவிடும் மானம்,
மதி கெடுக்கும், இது மெய், மெய், மெய்;

புளித்துப்போன பனங்கள்ளும், சளித்துப்போன தென்னங்கள்ளும்
ருசித்தால் தலைக்கேறும்; குடித்தால் குரங்காட்டம்;
குடுவையை விட்டோடிப் போ, போ, போ; ஓ

2. சாராயக் கடைக்குப் போய், சாராயப் புட்டி தூக்கி,
சாராயங் குடிப்பதேன்? சொல், சொல், சொல்;
காய்ச்சி வடித்த மது சாய்த்துப்போடுங் குடித்தால்;
வேர்த்து விழுவாய், இது மெய், மெய், மெய்;

யார்க்கு ரத்தங் கலங்கினகண்? யார்க்குக் காரணமில்லாக் காயம்?
யார்க்குப் புலம்பல், சண்டை? யார்க்குத் துக்கம், வேதனை?
சாராயம் நாடுவோர்க்கே—ஐ—யை—யோ! ஓ

3. ஜொலிக்கும் ஷாப்புக்குள், பளிங்குப் பாத்திரத்தில்,
குடித்த பானம் என்ன? சொல், சொல், சொல்;
பிடித்துக்கொள்ளும் உன்னை உவிஸ்கி,ஜின்,ரம்,பிராந்தி,
எரித்துவிடும், இது மெய், மெய், மெய்;

ஏல், ஸ்றவுற்று, ஏற்கா உனக்கு; ஷெரி, போர்ட், கிலாரெட், ஷாம்
தோலும் எலும்புமாகி வீடு வாச விழப்பாய்; [பேன் ஆகா;
பேரும்போம், குறிசொன்னேன் கேள், கேள், கேள்; ஓ

*28th May* 1916.

## 45. மதுவிலக்குக் கும்மி (Temperance Kummi).

1. கும்மியடியுங்கள் தோழிமார்காள்,
மதுவிலக்குக் கும்மி பாடுங்கள்;
தம்பி தங்கையர்க்கு மதுபானம்
விஷமெனச் சொல்லி யடியுங்கள்.

2. கள்ளுக் கடைக்குப் போகாதே தம்பி,
வெள்ளைக் குதிரைமேல் ஏறாதே நீ;
துள்ளி உனைக் காலின் கீழேபோடும்,
தள்ளாடி நடந்தேன் போகவேண்டும்?

3. சாராயக் கடைக்குப் போகாதே நீ,
கருங் குதிரைமேல் ஏருதே நீ;
பாராத கண்ணும் பார்த்து நகைக்கும்,
பெரும் பாதகமாம் செல்லத் தம்பி.

4. பிராந்தி ஷாப்புக்குள் போகாதே தம்பி,
சம்பாதித்த காசை எறியாதே;
பிராந்தி கொடிய தீப்பானமாம்,
தப்பித்துக்கொள்ளப்பார் செல்லத் தம்பி.

5. நுரைத்த கள்ளு புளிக்குந் தங்காய்,
குடித்தால் குமட்டிக் கொண்டுவரும்;
பிரையேறிய மதுபானங்கள்
குடியாதே புரைக் கேறுந் தங்காய்.

6. சாராயங் கொடிய விஷபானம்,
தலைக்கேறும் மயங்கி விழுவாய்;
சாராயம் உன்னை எரித்துவிடும்,
கலை கற்க முடியாது தங்காய்.

7. அன்னியதேச மதுபானங்கள்
அருந்தவே வேண்டாம் செல்லத் தங்காய்;
கன்னியர்க்கு மானபங்கமாகும்;
மருந்துக்கும் உதவாது தங்காய்.

8. குடிகாரர்களோடு சேராதே,
கூடியவரொடு குலவாதே;
படிப்படியாய்க் குடியில் சிக்கி
வாடிக்கையால் குடிகாரனுவாய்.

9. குடிகாரன் கண்கள் ரத்தமயம்,
கோபத்தால் அவன் மீசை துடிக்கும்;
பிடிபட்ட யானைபோல் பிளிறி
மோகங்கொண்டலைவான் இங்குமங்கும்.

10. தாயென்றுந் தாரமென்று மறியான்;
வாயில்வந்தபடி பிதற்றுவான்;
'போ' என்று சொன்னாலும் போகமாட்டான் ;
நீதியும் அநீதியு மறியான்.

11. நாணயமற்றவன் குடிகாரன்,
மூச்சுக்கு முந்நூறு பொய் பேசுவான்;
மானங்கெட்டு மதியுமிழந்து
மோக்ஷ பாதையை விட்டு நடப்பான்.

12. பெரிய சோம்பேறி குடிகாரன்,
பெற்றோர் சம்பாத்தியத்தை அழிப்பான்;
சிறிய பொருளுந் திருடுவான்,
மற்றோர் காலிலும் விழுந்தழுவான்.

13. சிறைச்சாலை அவன் மாமி வீடு,
சொந்த வீடும் அதுவாகுமல்லோ!
பறைசாற்றிப் பழிக்கப்பட்டாலும்
பஞ்ச மா பாவங்களுக்கும் அஞ்சான்.

14. பைத்தியகாரர் ஆஸ்பத்திரியில்
பார்க்கலாம் பெருங் குடிகாரனை;
வைத்தியராலும் ஒன்றுங் கூடாது,
மார்க்கந் தவறி நடந்திடாதே.

15. குடிகாரன் ஆஸ்தி வியாதியாம்,
சந்ததிக்கும் அதை விட்டுப்போவான்;
குடிக்கக் கஞ்சியுங் கிடையாமல்
நிந்தைக்காளாய்க் கஞ்சித் தொட்டி சேர்வான்.

16. குடிகாரன் கோலம் அலங்கோலம்,
அவன் குடும்பமும் அலங்கோலம்;
குடிகாரனுக் கேது ஒழுக்கம்?
அவன் குடும்பத்துக் கேது கனம்?

17. குடிகாரனுக்கு ஆயுள் சொற்பம்,
அவன் கோத்திரமும் அற்றுப்போகும்;
திடீரென விழுந்தும் மரிப்பான்,
அவன் தேடுவா ரற்றுங் கிடப்பான்.

18. காசுக்காசைப்பட்டுக் கொலை செய்வான்,
தூக்கு மரத்தில் ஊஞ்சலாடுவான்;
மாசு மறுவற் றிருக்கும்படி
நீக்கு குடிகாரன் சகவாசம்.

19. கும்மிப் பாட்டுக் கேட்ட செல்லத் தம்பி,
குடியரைக் கண்டால் விட்டோடிப்போ;
கும்மிக்கும் குடிக்கும் ஓயாச் சண்டை,
குடியை அடியோ டறு தம்பி.

20. மதுவிலக்குக் கும்மி முற்றிற்று,
தங்கையே நீ கற்ற நீதியென்ன?
மதுபானத்தை முற்றிலும் வெறு,
மங்கையே குடியரோடு கூடேல்.

16*th* *July* 1916.

## 46. குடிகாரனுடைய தாயின் புலம்பல்.
## (The Lamentation of a Drunkard's Mother).

1. பத்துமாதஞ் சுமந்து—பரிவாய்ப் பெற்று வளர்த்த
வித்வ சிரோமணியே,—என்மகனே, கண்மணியே!

2. கண்கள் சிவந்ததென்ன?—என் கண்மணியே, சொல்லாயோ?
புண்பட்ட என் நெஞ்சாற—உன் வாய்திறந்து பேசாயோ ?

3. கால்கள் தள்ளாடுவதேன்?—உன் கைகள் நடுங்குவதேன்?
கால், கரம், முகம், தலை—காயப்பட்ட காரணமேன்?

4. உன் பொன்மேனி மங்கிப்போய்-மண்மேனியாய் மாறினதேன்
முன்னிருந்த செல்வம்போய்—சீரழிய நேரிட்டதேன்?

5. பட்டுச் சொக்காய்கள் எங்கே?—உன் பாதரட்சையு மெங்கே?
கட்டுந் தலைப்பாகையும்—ஒய்யார நடையும் எங்கே?

6. கிளிபோன்ற பாரியாள்—விழி கலங்கி நிற்பதேன்?
புலிபோல் பாய்ந்தவனே—நீ புடைத்த காரணமேன்?

7. உன் செல்ல மக்கள் அரை—வெறுமையா யிருப்பதேன்?
உன்னைக் கண்டாலவர்கள்—பஞ்சாய்ப் பறந்துபோவதேன் ?

8. தந்தை சம்பாத்தியம்போய்—நீ தேடிய சம்பத்தும்போய்,
நிந்தைக்கு நீ ஆளாகி—கந்தைத் துணியும் போர்த்தாயோ?

9. கட்டிய வீடு எங்கே?—கட்டில், தலையணை யெங்கே?
பட்டினியாய்க் கிடந்து—பாதையில் படுத்ததென்ன?

10. பஞ்சமா பாதகங்கள்—பலவிதக் கோரணிகள்
அஞ்சாமல் செய்து கெட்டு—தூக்குமரஞ் செல்வதென்ன?

11. கட்கடைக்குள் போனாயோ?—கட்டழகா, என் மகனே,
வெட்கத்துக் குள்ளானாயே—வேறு நற் கதியில்லையோ?

12. சாராயக் கடைப்பக்கம்—சாயந்தரந்தோறும் நீபோய்,
சாராயங் குடித்ததால்—விஷந் தலைக் கேறினதோ?

13. பலநிற மதுக்கள்—பருகினதால் மகனே,
குலத்துக் கீனமான—கொலைபாதகஞ் செய்தாயோ?

14. உன் தாய் பதைபதைக்க—தம்பி, தங்கை, மக்கள் அழ,
உன் பாரியாள் புலம்ப—வேளைவந்த தறியாயோ?

15. தூக்கு மேடை மேலேறி—சுற்றி எல்லாரையும் பார்த்து,
மூக்கு, வாய், கண் மறைய—முழுக்குல்லாவும் போட்டாயோ?

16. சூத்திரத்தைத் தொடவே—தொங்குகிறான் செல்லமகன்;
ஆத்திரப்பட் டாவதென்ன!—ஐயையோ, உயிர் துறந்தான்!

17. பார்த்தழும் பாங்கிமாரே—பரிதபித் தாவதென்ன?
வேர்த்து விழுந்திடுவேன்—வீடுகொண்டு சேர்த்திடுங்கள்.

18. பிள்ளைகளைப் பெற்றோரே—கற்றோர் மற்றோருங் கேளுங்கள்,
பிள்ளைபெறல் போதாது—பேணிவளர்க்க வேண்டாமோ?

19. பெற்றோர் வழங்கலாமோ—பீர், பிராந்தி, கள், சாராயம்?
பெற்றோரால் கெட்ட மக்கள்—சாற்றும் பழி பலிக்காதோ?

20. செல்ல மகன் சரிதை—செப்பினேன் நடந்தபடி;
நல்ல பிதா மாதாக்கள்—நல்வளர்ப்பில் வளர்க்காரோ?

25, *August* 1916.

## 47. குடிகாரருடைய குமாரனின் நல்ல தீர்மானம்.
## (The good decision of the Son of Drunkards).

இராகம், நாதநாமக்கிரியை. மிசுரதாளம்.

1. மதுபானம்-விஷபானம்-அம்மா-அதை
மருந்துக்கென்று சொன்னாலும்-நான் தொடேன்-ஐயா-மது

2. ஜலபானம் ஏற்றபானம்-அம்மா-அதைக்
குலபானமாக்கிக்கொண்டால்-தீர்க்காயுள்-ஐயா-மது

3. புளித்த கள் உதவாது-அம்மா-அதைக்
குடித்தபின் தலை சுற்றும்-நான்தொடேன்-ஐயா-மது

4. வெளுத்த பால் எனக்காகும்-அம்மா-அதைக்
கொடுத்துப்பார்த்தால் குடிப்பேன்-தொண்டைவரை-ஐயா-மது

5. சாராயமும் பிடியாது-அம்மா-அதின்
காரம் தலைக்கேறிவிடும்-கொடியது-ஐயா-மது

6. காப்பிப் பானம் எனக்காகும்-அம்மா-கருங்
காப்பிப் பானம் சுடச்சுட-நான் குடிப்பேன்-ஐயா-மது

7. திராக்ஷரசம் மதுபானம்-அம்மா-அது
திராக்ஷப்பழம் போலவல்ல-நான் குடியேன்-ஐயா-மது

8. எலுமிச்சம்பழரசம்-அம்மா-அது
வெகு இஷ்டம் ஆனதினால்-விடமாட்டேன்-ஐயா-மது

9. பிராந்தியும் மதுபானம்-அம்மா-அதைச்
சாந்திசெய்ய யாராலாகும்-தரவேண்டாம்-ஐயா-மது

10. சோடா வாட்டர் சுக பானம்-அம்மா-அது
சோடா சேர்ந்த சுத்த ஜலம்-தோஷமில்லை-ஐயா-மது
11. கந்தைத் துணி கட்டவைக்கும்-அம்மா-அது
நிந்தைக்குள்ளாக்கிவிடுமே-நிர்ப்பாக்கியம்-ஐயா-மது
12. பணம், பொருள் புகைந்துபோம்-அம்மா-நான் ஏன்
பிணம்போல் கிடக்கவேண்டும்-பேரற்றுப்போய்-ஐயா-மது
13. கெட்ட வார்த்தை பேச ஏவும்-அம்மா-அது
துட்டரோடு உறவாட-வழி காட்டும்-ஐயா-மது
14. சண்டைபோட ஏவிவிடும்-அம்மா-நான் ஏன்
மண்டையை உடைத்துக்கொண்டு-மாளவேண்டும்-ஐயா-மது
15. துன்மார்க்கத்திற்கு நடத்தும்-அம்மா-நான் ஏன்
சன்மார்க்கந் தவறித் தோஷி-ஆகவேண்டும்-ஐயா-மது

**27*th August* 1916-**

## XI. அதிகாரம்.

### மதுவிலக்குக் கதைகள் (Temperance Anecdotes).

48. என்னைத் தொடாதே (Touch-me-not). முப்பது வருஷங்களுக்கு முன்னே இப்போது ஜார்ஜ்டவுன் (George-town) என்றழைக்கப்படும் பிளாக்டவுனில் (Blacktown) ஒரு அம்மாள் இரு வாலிபரை விருந்துக்கழைத்தார்கள். உவிஸ்கி (Whisky) என்னும் மதுபானம் பரிமாறப்படுகையில் ஒருவர் விருந்துக்கழைத்த அம்மாளுக்கு மரியாதை செய்யவென்று தாம் வெறுத்த மதுபானத்தைச் சலிக்கக் குடித்தார்; மற்றவரோ மதுபானப் பாத்திரம் அந்த அம்மாளால் நேராய்த் தமக்கு நீட்டப்பட்டாலும் "அதை வாங்க மாட்டேன்" (No) என்றார். இருவரும் விருந்துசாலையை விட்டு வெளிப்பட்டபின் தலையாட்டங்கொண்டவர் மற்றவரை நோக்கி, "இதுதானா நீ கற்ற கல்வி? இங்கிலிஷ் கற்றும்

மரியாதையாய் நடந்துகொள்ளவும், மரியாதையாய்ப் பேசவும் உனக்குத் தெரியவில்லையே! குடிக்க மனமில்லையாயினும் மரியாதைக்காகப் பாத்திரத்தை வாங்கி ஒரு மிடறு குடித்துவிட்டு அதை மேசைமேல் வைத்துவிடப்படாதா? வாங்க மனமில்லையாயினும் 'வேண்டாம் அம்மா, வந்தனம்' (No, thank you) என்று சொல்லலாமல்லவா ? நம்மை விருந்துக்கழைத்த அந்த நல்ல அம்மாளையும், உன்னோடுவிருந்துக்கிருந்த என்னையும் மற்றவர்களையும் கனவீனப்படுத்திவிட்டாயே'' என்று பலவாறாகப் பேசிக் கோபித்தார். மற்றவரோ மிக்க அமைதியாய் ''அந்த அம்மாள் விஷபானங் கொடுத்ததற்காக நான் எப்படி நன்றி செலுத்தக்கூடும்?'' என்றார். வெறி தணிந்தபின் இருவரும் மறுபடியுந் தர்க்கிக்க ஆரம்பித்தார்கள். மரியாதைக்காகக் குடித்தவர் தர்க்கஞ்செய்வதில் பேர் பெற்றவரானபடியால் பல முகாந்தரங்களை எடுத்துக் காட்டி, கடைசியில் ''சும்மா வந்ததைச் சும்மா குடிப்பதில் தோஷமென்ன?'' என்றார். அதற்கு மற்றவர் "மதுபானத்தை ருசி பார்க்கிறவர்கள் அதற்கு அடிமையாய்ப் போகிறார்களே'' என்றார். அதற்கவர் ''உன்னைப்போன்ற ஸ்திர சித்தமற்றவர்கள்தான் அதில் சிக்கிக்கொள்வார்கள்'' என்று பரிகாசமாய்ப் பேச ஆரம்பித்தார். மற்றவரோ அவரோடு தர்க்கிக்க முடியாமல், அவர் ஸ்திர சித்தமுடையவராதலால் மதுபானத்தை விட்டு விட்டாலும் மதுபானம் அவரிலும் வலியதாகையால் அது அவரை விடாதென்று தெரிவிக்கும் நோக்கமாய் நீச்சுக்காரன் பணமுடிப்பென வெண்கரடியைத் தூக்கி ஜலத்தில் அமிழ்ந்து மாண்ட கதையை அவருக்குச் சொன்னார். இவர் அன்று அக்கதையை வேடிக்கைக் கதையாகப் பாவித்தாராயினும் இன்று அவர் குடி என்னுங் கூளியின் காலின் கீழ்

அகப்பட்டு அன்று மதுபானங்கொடுத்த அம்மாளேச்சபித்துக் கொண்டிருக்கிறார். அன்று நூற்றுக்கணக்காய்ச் சம்பளம் வாங்கின அவர் இன்று படும் பாட்டுக்கு ஒரு அளவில்லே; காலத்துக்குமுன் கண்கள் இருண்டு கால்கள் தள்ளாடிப்போனதால் அவர் ஜீவன் அவருக்கே கசப்பாகிவிட்டது. வறுமையால் முகம் வாடிய அவர் மனேவி பேர்சொல்லப் பிள்ளேயில்லேயே என்கிற ஏக்கம் பிடித்தவர்களாய் முன் செல்லுங் காசாயிருந்த தங்கள் கணவனுர் இப்போது மதிப்பற்றுப் போனது மதுபானத்திஞலல்லவா என்று புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மெய்யான சரித்திரம் மதுபானம் "என்னேத் தொடாதே" என்று கூறுஞ் சத்தம் என்றறிக.

## 49. நான் அம்மாளுக்கு என்னசெய்வேன்? நான் ஐயாவுக்கு என்ன செய்வேன்?

## (What shall I do for mother? What shall I do for father?)

கொஞ்சக் காலத்துக்குமுன் பினங்கு, சிங்கப்பூர்ப்பக்கமிருந்து ஒரு சிறு குடும்பத்தார் சென்னேயிலுள்ள ஒரு வீட்டில் வந்து தங்கினார்கள். தகப்பன் பகலெல்லாம் குடித்து வெறித்திருந்து இரவில் சாப்பிட இலேமுன் உட்கார்ந்தான்; இலேமேலிருந்தவைகளே எடுக்கவும், எடுத்தவைகளே நேராய் வாய்க்குக் கொண்டுபோகவும் அவன் கை வசமற்றிருந்தபடியால் அவன் மனேவி அவனுக்குச் சோற்றை அள்ளி ஊட்டிஞள். அவன் கேட்டுக்கொண்டபடி அவள் பிராந்தி ஊற்றி அவனேக் குடிக்கச்செய்து, அங்கேயே அவனேக்கிடத்திவிட்டு, பிராந்திப் புட்டியை அறைக்குள் பத்திரமாய் வைத்துக் கொண்டு, அவளும் அவள் மகளும் உட்தாட்பாள்போட்டுப் படுத்துக்கொண்டார்கள். நடு இராத்திரியில் அந்த மனுஷன்

எழுந்திருந்து பெருஞ் சத்தமிட்டு பிராந்திப் புட்டிக்காகக் கதவைத் தட்டினன். அவன் மனைவி கதவைத் திறக்கவுமில்லை; பிராந்திப் புட்டியைக் கொடுக்கவுமில்லை. அவன் செய்த கோஷ்டம் அவனுக்குத் தயவாய் இடங்கொடுத்த அவ்வீட்டாரையும் எழுப்பிவிட்டது. அவனுக்கு அவர்கள் சொன்ன புத்தி செவிடன் காதில் ஊதிய சங்கின் நாதத்துக்கொப்பாய் இருந்தபடியால் அவர்கள் தங்கள் அறைக்குப்போய் மறுபடியும் படுத்துக்கொண்டார்கள். அந்த மனுஷனே ஒரு பெருங் கல்லைத் தேடி எடுத்து, தன் மனைவியும் மகளும் படுத்திருந்த அறையின் கதவை உடைக்க ஆரம்பித்ததுமல்லாமல் தன் மனைவியைக் கொல்லவும் சபதஞ்செய்து கொண்டான். குட்டியைப்பறிகொடுத்த புலிபோல் அவன் சீறிப் பாய்ந்தது அவ்வீட்டார் பயப்படத் தக்கதாயிருந்தது. எட்டொன்பது வயதுள்ள அவன் மகள் திடீரெனத் தாட்பாளைத் திறந்து வெளியே வந்து அவன் கால்களைப் பிடித்துக்கொண்டு "ஐயா, அம்மாளைக் கொல்லாதேயுங்கள்; நீங்கள் அம்மாளைக் கொன்றுவிட்டால் நான் அம்மாளுக்கு என்ன செய்வேன்? நீங்கள் அம்மாளைக் கொன்றால் உங்களைத் தூக்கில் போட்டுக் கொன்றுவிடுவார்களே; அப்போது நான் ஐயாவுக்கு என்ன செய்வேன்?" என்றாள். உடனே அவன் கல்லை வெளியேபோட்டுவிட்டானாயினும் பிராந்திப் புட்டியின்மேல் அவனுக்கிருந்த கவனம் போகவில்லை. அவன் இரவு பகலாய்க் குடித்து வெறித்தபடியால் அவன் குடும்ப சகிதமாய்த் தன் ஊர்போய்ச் சேருவது கூடாத காரியமாகத் தோன்றினது. ஆதலால் அவ்வீட்டார் முதலாவது அவன் மனைவியையும் மகளையும் புகை ரதத்தில் ஏற்றி அனுப்பிவிட்டார்கள். இரண்டொரு நாள் பொறுத்து அவன் கைலாகுபெற்று நடக்கக்கூடிய

நேரத்தில் அவனையும் புகைரதத்திலேற்றி அவனை ஊர் கொண்டுபோய்ச் சேர்க்கக் கூலியாட்களையுங்கூட அனுப்பினார்கள்.

50. ஜலமே விருந்துசாலைப் பானம் (Water is the only Table Drink). கனம்பொருந்திய திரேசி பண்டிதர் (Rev. W. Tracy, D. D.) பசுமலைக் கலாசாலைக்குத் தலைவராயிருந்த காலத்தில் தமது ஜநந தேசத்திற்குப் போனார். அங்கு ஒரு துரைசானி அவரை விருந்துக்குஅழைத்து இந்தியாவைப்பற்றி வினவினார்கள். விருந்து சமயத்தில் மேசையின் மேல் ஜலம் ஒன்றுதவிர வேறு பானம் இல்லாதிருப்பதைக் கண்டபோது அவருக்கிருந்த ஆச்சரியத்திற்கு ஒரு அளவில்லை. குளிர்ச்சியான அத்தேசத்தில் தேயிலைப் பானம் மிகச் சாதாரண பானம். மதுபானம் வழங்கா விருந்துகளில் தேயிலைப் பானமே சிரேஷ்ட பானமாகவுமிருக்கும். மேசைமேல் ஜலம் ஒன்றே பானமாக வைக்கப்பட்டிருந்ததற்கு நல்ல காரணம் ஒன்றிருக்கும் என்று நினைத்தார். இந்தியாவில் தேயிலை சாப்பிடும் வழக்கம் இராதென்று நினைத்து அந்த அம்மாள் அப்படிச் செய்திருக்கலாம் என்கிற எண்ணமும் அவருக்கு வந்தது. ஆயினும் அந்த அம்மாளிடத்தில் அதைப்பற்றிக் கேட்கத் துணியவில்லை. போஜனத்தைவிட்டு எழுந்திருந்தபின் அந்தஅம்மாள் தங்களுடையசரித்திரத்தை அவருக்குச் சொல்ல ஆரம்பித்தார்கள். அவர்கள் ஆரம்பத்திலேயே சொன்னதாவது:— "ஐயா, நீங்கள் பந்தியிலிருக்கையில் உங்கள் மனதில் நிகழ்ந்ததை ஒருவாறு கிரகித்துக்கொண்டேன். என் புருஷன் பெருத்த குடிகாரர். அவர் என்னை நேசித்தார்; என்றாலும் குடிவெறியில் அவர் செய்த கோரணிகளைச் சொல்ல நாவெழவில்லை. ஒருநாள்

என் பரமபிதாவின் பாதத்தில் பல மணி நேரம் தரித்திருந்த பின் என் அருமைக் கணவனைத் தழுவிக்கொண்டு குடியை விட்டுவிட மன்றாடினேன். அவரோ 'நீ தேயிலையைவிட்டு விட்டால் நான் மதுபானத்தை விட்டுவிடுவேன்' என்றார். நான் அவர் வார்த்தையைப் பிடித்துக்கொண்டு அப்போதே தேயிலையை விட்டுவிட்டேன். அவர் குடியை விட மனமற்றவராய்க் காணப்பட்டாலும் சிந்தியாமல் கொடுத்த வாக்கையும் மீறக்கூடாதவராய் மதுபானத்தைக் கட்டோடொழித்து விட்டார். நாங்கள் மறுபடியும் ஆஸ்திக்காரரானோம். என் அருமைக் கணவன் மறுமைக்குட்பட்டு அநேகவருஷங்களாகியும் ஜலம் ஒன்றே இன்றைக்கும் என்பானமாக இருக்கிறது. விருந்துக்கு வருகிறவர்களுக்கும் அதையே பானமாக வைக்கிறேன். இதற்குக் காரணம் தேயிலை குடிக்குங் காலத்தில் வியாதிக்காரியாக விளங்கிய நான் ஜலம் ஒன்றையே பருகிய பின் வியாதிப்படாமல் தீர்க்காயுள் பெற்றிருப்பதே."

☞ குறிப்பு:—உபாத்திமாரும், பெற்றோரும், மற்றோரும் பிள்ளைகளுக்கு அவர்கள் கண்கள்முன் நிகழும் இப்படிப்பட்ட பல உண்மையான சரித்திரங்களைச் சொல்வது நன்மை பயக்கும். நல்ல பாடங் கற்பிக்கவென்றும் கட்டுக் கதைகளைப் பிள்ளைகளுக்குச் சொல்வது சரியல்லவென்பது நம்முடைய அபிப்பிராயம். P. B.

# PARADISE BIRD'S PUBLICATIONS.

| Series | No. | Name of Books. | Price. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|
| 1st | 1. | Nine Weeks' Arithmetic, English ... | 0 | 1 | 0 |
| | 2. | Catechetical Genesis, Tamil (out of print) | | | |
| | 3. | Catechetical Gospel, Tamil do. | | | |
| | 4. | The Seasons and Tides, Tamil ... | 0 | 1 | 0 |
| | 5. | Causes which determine Climate, Anglo-Tamil ... | 0 | 0 | 9 |
| 2nd | 6. | Domestic Economy, Tamil ... | 0 | 8 | 0 |
| | 7. | Infant Primer, Tamil ... | 0 | 1 | 0 |
| | 8. | Domestic Hygiene, Tamil ... | 0 | 4 | 0 |
| | 9. | Donatios the Boy Preacher, Tamil ... | 0 | 0 | 6 |
| | 10. | The Lord's Cash-Book, Tamil ... | 0 | 1 | 0 |
| Third or Jubilee | 11. | My Conception of a Lady, English ... | 0 | 2 | 6 |
| | 12. | My Conception of a Gentleman, English ... | 0 | 2 | 6 |
| | 13. | Paradise within the Thorn Hedge, Tamil | 0 | 6 | 0 |
| | 14. | Sweet Scented Garland, Tamil ... | 0 | 1 | 6 |
| | 15. | The Hero who conquered the Devil, Tamil ... | 0 | 1 | 0 |
| | 16. | A Happy Christmas, Tamil ... | 0 | 0 | 6 |
| | 17. | War and Peace, English ... | 0 | 0 | 9 |
| 4th | 18. | Domestic Medical Science, Tamil ... | 0 | 6 | 0 |
| | 19. | Domestic Temperance Science, Tamil. | 0 | 4 | 0 |

On orders below Rs. 5, the price of books only; from Rs. 5 to 10, commission at 12½ per cent.; from Rs. 10 to 20, commission at 15 per cent.; from Rs. 20 to 30, commission at 17½ per cent.; and from Rs. 30, upwards commission at 20 per cent. Postage and V. P. charges extra.

Apply to the Author:—

**Y. G. BONNELL, P. B.,**

*Paradise Lodge, Royapuram,*
*Madras.*